ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

27.08.2014 - மலர் 11, இதழ் 26





## வெப்பமடையும் உலகம்: எதிர்நோக்கும் பாதிப்புக்கள்

PUBLIC LI... JAFFNA



## தாவரங்களுக்கும் கேட்கும் திறன் உண்டாம்...!



## 'பிட்சா' பிறந்த கதை



## இவ்வார கார்ட்டூன் படம்...

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




01) SCHOOL எனும் ஆங்கிலச் சொல் குறிப்பது;


1. தனியார் வகுப்பு 2. பல்கலைக்கழகம்
3. பாடசாலை

02) இங்கு கல்வி கற்பவர்கள் யாவர்?

1. ஆசிரியர்கள் 2. மாணவர்கள்
3. தாதிமார்

03) இங்கு கல்வி கற்பிப்பவர்கள்;

1. மருத்துவர்கள் 2. மார்க்க அறிஞர்கள்
3. ஆசிரியர்கள்




01) இங்கு .................. சதுரமுகிகள் உள்ளன.

1. ஆறு
2. ஏழு
3. எட்டு




02) ஊதா நிற சதுரமுகிக்கு இடது - வலது பக்கங்களில் காணப்படும் சதுரமுகிகளின் நிறங்கள் யாவை?

..................................

03) இளம் பச்சை நிறத்திலான சதுரமுகிகளிலுள்ள இலக்கங்களின் கூட்டுத்தொகை யாது?


..................................

## சரியான விடையை கட்டங்களுக்குள் எழுதுக

My house is near a  ☐☐☐☐ (river / pond)

One day I heard the croaking of a  ☐☐☐☐ (crab / frog)

I saw it had entered my  ☐☐☐☐☐ (house / kitchen)

and jumped into my bath  ☐☐☐ (room / tub)


I got scared and came out of it.

The frog followed me, so I ran out of the  ☐☐☐☐ - ☐☐☐☐ (bath tub / bath room)

I went to my  ☐☐☐ - ☐☐☐☐ and hid there. (bath room / bed room)

The  ☐☐☐☐ could not find me, so (crab / frog)

it went back to its  ☐☐☐☐ (river / pond)




01) விபத்து மற்றும் அவசர நிலைமைகளின்போது, பாதிக்கப்பட்டோரை வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்ல உதவுவது;

1. airplane 2.van 3.ambulance

02) இங்கு இருப்பவற்றில் வான் போக்குவரத்துக்கு உதவும் போக்குவரத்து சாதனங்கள் எவை?

..................................


03) இருபதுக்கும் மேற்பட்ட பயணிகள் அமர்ந்து செல்லக்கூடிய தரைமார்க்க போக்குவரத்து சாதனங்கள் இரண்டு தருக.

..................................

- ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரவதைக்குள்ளாகி வந்த யானைக்கு விடுதலை



சுமார் 50 வருடங்களாக சித்திரவதைகளுக்குள்ளாகி வந்த ராஜு, விடுதலை பெற்றபோது...

சுமார் 50 வருடங்களாக சங்கிலியால் கட்டிவைத்து கடுமையான சித்திரவதைகளுக்குள்ளாக்கப்பட்டு வந்த இந்திய யானை ஒன்றை விடுவித்து, அதனைக் காட்டில் சுதந்திரமாக சுற்றித்திரிய விட்ட சம்பவமொன்று அண்மையில் நிகழ்ந்துள்ளது. முட்கம்பிகளைக் கொண்ட சங்கிலிகளால் பாதங்கள் கட்டி வைக்கப்பட்டு, கடுமையான சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு வந்த இந்த யானையை 'வைல்ட்லைஃப் எஸ்.ஓ.எஸ்' என்ற சர்வதேச அமைப்பே விடுவித்திருந்தது.

'ராஜு' என்று அழைக்கப்படும் இந்த யானையை விடுவிக்கும் நடவடிக்கையை வைல்ட்லைஃப் எஸ். ஓ. எஸ் அமைப்புடன், இந்திய அரசும் அந்நாட்டு வனவிலங்குகள் சரணாலய அதிகாரிகளும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்டிருந்தன. கடுமையான சித்திரவதைகளை எதிர்கொண்ட ராஜுவை, இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரே வளர்த்து வந்துள்ளார். ராஜு, குட்டியாக இருக்கும்போதுதான், இந்த வர்த்தகருக்கு அது கிடைத்துள்ளது. குட்டிப் பருவத்தில் இருக்கும்போது, அதன் தாயார் வேட்டைக்காரர்களால் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும், பின்னர் அந்த வேட்டைக்காரர்கள் ராஜுவை இந்த வர்த்தகரிடம் விற்றிருக்கலாம் என்றும் அதிகாரிகள் கருதுகின்றனர். அந்த வர்த்தகர் கடந்த 50 வருடங்களாக ராஜுவை சுற்றுலாப் பயணிகளுக்குக் காட்டி, பணம் சம்பாதித்து வந்துள்ளார். அத்துடன், ராஜுவுக்கு சரியான உணவு வகைகளை அவர் வழங்கவில்லை என்றும் குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றது.

இந்நிலையிலேயே, சுமார் ஓராண்டுக்கு முன்பு லண்டனின் 'வைல்ட்லைஃப் எஸ்.ஓ.எஸ்' சர்வதேச அமைப்புக்கு ராஜுவை பற்றி தெரியவந்துள்ளது. அந்த அமைப்பினர் ராஜுவைக் காப்பாற்றவென விசேட அறக்கட்டளை ஒன்றை நிறுவினர். சரியாக ஓராண்டின் பின்னர், இந்த வைல்ட்லைஃப் எஸ்.ஓ.எஸ். அமைப்பின் அதிகாரிகள் குழுவொன்று உத்தரப் பிரதேசத்திற்குச் சென்றது. அந்தக் குழுவில் கால்நடை மருத்துவ நிபுணர்களும் உள்ளடங்கியிருந்தனர். அவர்களுக்கு இந்திய அரசாங்க அதிகாரிகளும் உதவிகளை வழங்கினர்.


அந்த வர்த்தகரிடமிருந்து ராஜுவை விடுவித்துக்கொண்ட வைல்ட்லைஃப் எஸ்.ஓ.எஸ். அமைப்பினர் தம்முடன் வந்த, கால்நடை மருத்துவ நிபுணர்கள் மூலம் ராஜுவுக்கு சிகிச்சைகளை அளித்தனர். ராஜுவின் முன்னங்கால்களில் கட்டப்பட்டிருந்த இரும்புச் சங்கிலிகள் அதன் பாதங்களைக் குத்திக் காயப்படுத்தியிருப்பது அப்போது அவதானிக்கப்பட்டது. இதனை அடுத்து, அந்த சங்கிலிகள் உடனே அகற்றப்பட்டு உரிய மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்பட்டன.

5 1/2 தொன் நிறை கொண்ட ராஜுவுக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர், லொறியொன்றில் அது ஏற்றிச் செல்லப்பட்டு, உத்தரப் பிரதேசத்தில் இருந்து 350 மைல் தொலைவில் உள்ள மதுராவில் அமைந்துள்ள யானைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு மையமொன்றில் அது விடுவிக்கப்பட்டது. சுதந்திர வாழ்க்கை அனுபவிக்கும் பொருட்டு ராஜு அங்கு விடுவிக்கப்பட்டபோது, அதன் கண்களில் கண்ணீர் துளிகளைக் காண முடிந்ததாக வைல்ட்லைஃப் எஸ்.ஓ.எஸ். அதிகாரிகள் தெரிவித்தனர். -(ரி)



ராஜுவுக்கு சிகிச்சையளிக்கும்போது...

ராஜுவின் கால்களில் கட்டப்பட்டிருந்த சங்கிலிகளை வைல்ட்லைஃப் கால்நடை மருத்துவரொருவர் அகற்ற முயற்சிக்கும் காட்சி





யானைகள் பாதுகாப்பு மையத்தை நோக்கி திறந்த லொறியில் ராஜு ஏற்றிச் செல்லப்படும்போது...



ராஜுவின் கால்கள் இரும்புச் சங்கிலிகளால் கட்டப்பட்டிருந்த விதம்.

விஜய
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

தமிழ் FM இல்
'ஆறாம் அறிவு' நிகழ்ச்சி கேளுங்கள்...
'விஜய்' சந்தா பரிசைப் பெறுங்கள்...!



விஜய்
த தமிழ் fm

தமிழ் FM வானொலியில் திங்கள் முதல் வெள்ளி வரை மாலை 3 மணியிலிருந்து 5 மணிவரை ஒலிபரப்பாகும் 'ஆறாம் அறிவு' என்ற மாணவர்களுக்குப் பொருத்தமான அறிவுத் தேடல் நிகழ்ச்சியில் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதில் அளித்து, 'விஜய்' பத்திரிகை வழங்கும் சந்தா பரிசை வெல்லும் வாய்ப்பினைப் பெறுங்கள்!

தமிழ் FM வன்னி 99.5 FM, யாழ்ப்பாணம் 99.7 FM
நாடு முழுவதும் 107.8 FM
இணையத்தில்: www.tamilfm.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் சீனா, பல அரசுகளாகப் பிரிந்து காணப்பட்டது. ஒவ்வொரு சிறிய பகுதியும், ஓர் அரசரால் ஆளப்பட்டது. ஒரு காலகட்டத்தில் 'கியூ' என்ற பகுதியை சூயன் என்ற பேரரசர் ஆட்சி செய்தார்.

அவர் ஆடம்பரப் பிரியர். வண்ண வண்ண ஆடைகளை அணிவதிலும், மணம் தரும் விலை உயர்ந்த தைலங்களைப் பயன்படுத்துவதிலும் மிகவும் ஆர்வம் கொண்டிருந்தார். ஒவ்வொரு நாளும் தலைமுடி, மீசை, குறுந்தாடி ஆகியவற்றை வெட்டி சீர் செய்யத் தனி அலுவலர்களை வைத்திருந்தார்.

தினமும் விதவிதமான பிராணிகளைப் பிடித்து சமைத்து உண்பதில் சூயன் மகிழ்ச்சி அடைந்தார். ஒருநாளில் ஆறு அல்லது ஏழு முறைகூட உணவு உண்பார். அவருக்கு சாப்பிடுவதிலும், வித விதமான ஆடை அணிவதிலும், பின்னர் உறங்குவதிலும் ஆர்வம் மிகுதி. நாட்டு மக்கள் நலனில் அவருக்கு சிறிதுகூட அதிக அக்கறை இல்லை.

நற்பண்பு, ஒழுக்கம், தூய உள்ளம், நேர்மை ஆகியவற்றில் அவர் அதிக அக்கறை இல்லாமல் இருந்தார். அந்நாட்டில் ஒரு கிராமத்தில் சீயூ என்ற பெண்மணி வசித்தாள். அவள் கறுப்பு நிறத்தில் அழகில்லாமல் இருந்தாள். அவள் கண்கள் குழியில் இருப்பது போல் தோன்றின. தலைமயிர் நெருக்கம் இல்லாமல், இடைவெளி விட்டு வளர்ந்திருந்தன. அவளை எவரும் விரும்பவில்லை. அவள் தனியாகவே வாழ்ந்து வந்தாள். அப்போது அயல் நாடான நூயு என்ற பகுதிக்கும், கியூவுக்கும் இடையே அடிக்கடி சண்டை மூண்டது. மக்களால் நிம்மதியாக வாழ முடியவில்லை. இது சீயூவுக்கு மிகுந்த மன உளைச்சலைக் கொடுத்தது.



# கறுப்பு சீயூ!

ஒருநாள் அவள் தைரியமாக மன்னரின் அரண்மனைக்கு சென்றாள். காவலர்கள் அவளை உள்ளே விட மறுத்தனர். அவள் தனது வலிமை எல்லாம் சேர்த்து அவர்களை அடித்து தரையில் சாய்த்தாள். பின்னர் நேராக அரசரின் முன்னால் வந்து நின்றாள். அவளது அவலட்சணமான தோற்றத்தைப் பார்த்து அரசர் வியப்படைந்தார். இப்படியும் அவலட்சனமான பெண் இருக்க முடியுமா என்று சிந்தித்தார். "பெண்ணே உனக்கு என்ன வேண்டும்?" என்று அரசர் கேட்டார்.

"எனக்கு ஆட்சிப் பணி செய்ய அனுமதி வேண்டும்," என்றாள்.

"நீ ஏன் அவ்வாறு கேட்கிறாய்?" என அரசர் கேட்டார்.

"அரசே! நமது நாடு தற்போது இக்கட்டான நிலையில் இருக்கிறது. நூயு, சோயு என்ற பக்கத்து நாடுகள் நம்மை விழுங்க தயாராகிவிட்டன. இதனால், நமது நாடும் மிகுந்த குழப்பத்தில் உள்ளது. இது ஜீவ மரணப் போராட்டமே ஆகும்! ஆனால், தாங்கள் இதில் அக்கறை இல்லாமல் இருப்பதை நினைத்தால், எனக்கு மிகுந்த வருத்தமாக இருக்கிறது" என்று கூறினாள்.

அவளது சொல்லைக்கேட்ட அரசர் அதிர்ச்சியடைந்தார். 'இதுவரை நாம் இதைக் கண்டுகொள்ளாமல் ஆடம்பரப் பிரியராக இருந்தது எவ்வளவு பெரிய தவறு' என்பதை அறிந்தார். "சியூ, என்னை மன்னித்துவிடு... நான் நாட்டின்மீது அக்கறை இல்லாமல் இருந்துவிட்டேன். இன்றுமுதல் உன்னை எனது முதன்மை அமைச்சராக நியமிக்கிறேன்" என்றார்.

அரசர் சீயூவின் ஆலோசனையைக் கேட்டு நாட்டைக் காப்பாற்றினார். சில ஆண்டுகளுக்குப் பின்னர் சீயூ பட்டத்து ராணியாகவும் நியமிக்கப்பட்டாள். கடைசி காலம்வரை, அவள் அரசருக்கு உற்ற தோழியாகவும் இருந்தாள். கறுப்பு நிறத்தில் அழகற்றவளாய் இருந்த சீயூ இன்றும் மக்களால் போற்றிப் புகழப்படுகிறாள்.



## தெனாலிராமன் கதைகள்

மன்னர் கிருஷ்ணதேவராயருக்கு அவருடைய தாயார் அன்பும் மரியாதையும் உண்டு. தாய்மேல் அளவு கடந்த பாசமும் வைத்திருந்தார். அவரது தாயாருக்கு வயோதிகம் ஆகிவிட்டபடியால் மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தார். வைத்தியரை அழைத்து தன் தாயின் உடல்நிலையைப் பரிசோதிக்கச் செய்தார். பரிசோதனை செய்த வைத்தியரும் "தங்கள் தாயார் அதிகநாள் இருக்கமாட்டார்கள். விரைவில் இயற்கையெய்தி விடுவார்கள்" என்று கூறினார். அது கேட்ட மன்னர் வேதனையுற்றார். தன் தாயாரிடம் சென்று "அம்மா, உங்களுக்கு சாப்பிட எது மிகவும் ஆசையாக இருக்கிறது" என்று கேட்டார்.

அதற்கு அவரது தாயாரும் "மாம்பழம்தான் வேண்டும்" என்றார். அப்போது மாம்பழம் கிடைக்கக்கூடிய காலமல்ல. இருப்பினும், தன் ஆட்களை அனுப்பி எங்கிருந்தாவது மாம்பழம் வாங்கிவர ஏற்பாடு செய்தார். ஆட்கள் மாம்பழம் வாங்கிவரப் புறப்பட்டனர். மாம்பழம் வந்து சேர்வதற்குள் அவரது தாயார் மரணம் அடைந்து விட்டார். மாம்பழம் சாப்பிடாமலேயே தன் தாயார் மரணம் அடைந்தது குறித்து மன்னர் மிக வேதனை அடைந்தார். அதற்குப் பரிகாரம் செய்ய எண்ணி அரண்மனைப் புரோகிதர்களை அழைத்து ஆலோசனை கேட்டார்.

பேராசை பிடித்த புரோகிதர்களும் 'மாம்பழம் சாப்பிடாமல் இறந்ததால் அவரது ஆன்மா சாந்தியடைய தங்கத்தால் 108 மாங்கனிகளைச் செய்து 108 புரோகிதர்களுக்குக் கொடுத்தால் சரியாகிவிடும்" என்றனர். மன்னரும் 108 மாம்பழங்கள் தங்கத்தால் செய்ய ஏற்பாடு செய்தார். சில நாட்களில் 108 தங்க மாம்பழங்களை 108 புரோகிதர்களுக்கு மன்னர் கொடுத்தார். புரோகிதர்களும் மிக மகிழ்ச்சியுடன் அவற்றைப் பெற்றுக் கொண்டனர்.

இச்செய்தியை தெனாலிராமன் அறிந்து வேதனையுற்றான். புரோகிதர்களுக்குத் தக்க பாடம் கற்பிக்க எண்ணினான். அதன்படி, செயலாற்றத் தொடங்கி புரோகிதர்களைச் சந்தித்தான். "என் அம்மாவிற்குத் திதி வருகிறது. அதற்குத் தாங்கள்

# சூடுபட்ட புரோகிதர்கள்

அனைவரும் வந்து புரோகிதம் பண்ணுங்கள். என்னால் முடிந்தளவு தானம் தருகிறேன்" என்றான்.



புரோகிதர்களும் மகிழ்ந்து தெனாலிராமன் வீட்டிற்கு வந்தனர்.

அவனும் புரோகிதர்களை வரவேற்று அமரச் செய்தான். பின் கதவுகளை நன்கு தாழிட்டுப் பூட்டிக்கொண்டான். ஏற்கனவே நன்கு பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியால் ஆளுக்கு ஒரு சூடு போட்டான். புரோகிதர்கள் "ஐயோ! அம்மா" என்று கதறினார்கள். பின் மன்னரிடம் சென்று முறையிட்டனர்.

இதனால் மன்னர் தொனலிராமன் மீது மிகவும் கோபங்கொண்டார். பின் தன் பணியாட்களை அனுப்பி தெனாலிராமனை இழுத்துவரச் செய்தார். தெனாலிராமனைப் பார்த்ததும் "ஏனடா புரோகிதர்களுக்கு இவ்வாறு சூடு போட்டாய்" என்று கேட்டார்.

"மன்னாதி மன்னா... என்னை மன்னிக்க வேண்டும். நான் சொல்வதை தாங்கள் கவனமாகக் கேட்கவேண்டுகிறேன். என் தாயார் உடல் நலமில்லாதிருந்து இறக்கும் தருவாயில் வலிப்பு நோய் வந்துவிட்டது. அதற்கு வைத்தியர்கள் என் தாயாருக்குச் சூடு போடும்படி சொன்னார்கள். நான் சூடு போடும் முன் என் தாயார் இறந்துவிட்டார்கள். ஆகையால், என் தாயாரின் ஆன்மா சாந்தியடைய புரோகிதர்களுக்கு சூடு போடும்படி பெரியவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொன்னபடியே தான் புரோகிதர்களுக்குச் சூடு போட்டேன். இதில் என்ன தப்பு இருக்கிறது" என்று மன்னரிடம் கேட்டான் தெனாலிராமன்.

இதைக் கேட்ட மன்னர் கோபம் கொண்டு "என்னடா தெனாலிராமா, இது முட்டாள்தனமாக இருக்கிறதே" என்றார். இல்லை அரசே, விளக்கமாகக் கூறுகிறேன் சற்றுக் கேளுங்கள்". முன்பு தங்கள் தாயார் மாம்பழம் சாப்பிடாமல் இறந்ததால் அவர்கள் ஆன்மா சாந்தியடைய 108 பொன் மாங்கனிகள் 108 புரோகிதர்களுக்குக் கொடுத்ததால்தான் அவர்கள் ஆன்மா சாந்தியடையும் என்று சொன்னார்களே... அதன்படியும் தாங்கள் கொடுத்தீர்களே... அதுபோலவே என் தாயாரின் வலிப்பு நோய்க்கு சூடு போட முடியாமல் போனதால்தான் இவர்களுக்குச் சூடு போட்டேன் என்றான். இதைக் கேட்ட மன்னர் நகைத்துவிட்டார். தெனாலிராமனைப் பாராட்டினார். புரோகிதர்களின் பேராசையையும் புரிந்துகொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயதிற்கேற்ப உணவுகளைத்



அனைத்து விலங்குகளுமே உணவில் தங்கியிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. இது மனிதர்களுக்கும் பொதுவானதே! எனினும், மனிதர்களும் அந்தந்த வயதுக்கு ஏற்ப உணவுகளைத் தெரிவுசெய்யும் முறை ஒன்று உள்ளது. இவை, அவரவர் கலாசாரத்திற்கும் இனத்திற்கும் ஏற்ப வேறுபடுகின்றது. பொதுவாகக் கூறுவதாயின், அனைத்து மனிதர்களும் உணவுச் சங்கிலிக்கு ஏற்பவே உணவுகளை உட்கொள்ள வேண்டியுள்ளது.

## தாயின் கருவறையில் இருக்கும் போது...

தாயின் வயிற்றில் இருக்கும் போது, குழந்தை தாயின் உணவுகளின் மூலமே போஷாக்குப் பெறுகின்றது. தாய் போஷாக்குடைய உணவுகளை உட்கொள்ளாவிடின், குழந்தைக்கும் பாதிப்பு ஏற்படும். குழந்தையின் வளர்ச்சி பாதிக்கப்படும். இதனால், ஆரோக்கியமான குழந்தைப் பிறப்புக்கு தாயின் உணவு முக்கியத்துவம் பெறுகின்றது. பொதுவாக, குழந்தையின் பிறப்பு நிறை (பிறக்கும்போது உள்ள நிறை) 2 கிலோகிராமைவிட அதிகமாக இருக்க வேண்டும். தாயின் வயிற்றில் குழந்தைக்கு சரியான போஷாக்கு கிடைக்காவிட்டால், குழந்தையின் நிறை குறைந்து விடும். இதனால்,



குழந்தைகள் எளிதில் நோய் வாய்ப்பட்டுவிடுவர். தாயின் வயிற்றில் இருக்கும்போது குழந்தைகளுக்கு அதன் வளர்ச்சிக்கு இரும்புச் சத்து அவசியமாகும். மீன், இறைச்சி, கருவாடு ஆகிய விலங்குகள் உணவிலும் பருப்பு, கடலை, கௌபீ, பயறு, வல்லாரை, சிறுகீரை, முருங்கைக் கீரை ஆகிய தாவர உணவுகளிலும் இரும்புச் சத்து அதிகளவில் உள்ளது. உணவுகளில் உள்ள இரும்புச் சத்துக்களை விரைவில் உடலுக்குள் உறிஞ்சிக்கொள்வதற்கு விட்டமின் 'C' அவசியமாகும். இதனால், இரும்புச் சத்துடன் விட்டமின் 'C' உள்ள உணவுகளை உட்கொள்வது அவசியமாகும். நெல்லி, தோடை, தக்காளி என்பனவற்றில் விற்றமின் 'C' அதிகளவில் உள்ளது. தாயின் வயிற்றில் வளரும் குழந்தையின் எலும்பு வளர்ச்சிக்கு கல்சியம் அவசியமாகின்றது. திரவப்பால், கட்டித்தயிர், சீஸ், யோகட் ஆகிய உணவுப் பானங்களை உட்கொள்வதனால், கல்சியத் தேவையை பூர்த்தி செய்துகொள்ள முடியும். தாய் ஒருவர் கல்சியம் குறைவான உணவுகளை உட்கொண்டால், தாயின் எலும்பில் உள்ள கல்சியத்தை குழந்தை பெற்றுக்கொள்ளும்.

## குழந்தைப் பருவத்தில்...

குழந்தை பிறந்து ஆறு மாதங்கள் கடக்கும் வரையில் அக்குழந்தையின் உடல், மன வளர்ச்சிக்கு தாய்ப்பால் மட்டும் போதுமானது என்பது மருத்துவர்களின் அபிப்பிராயமாகும். குழந்தை பிறந்து ஒரு சில நாட்களில் தாய்ப் பாலில் 'கொலஸ்ட்ரம்' உள்ளடங்கியிருக்கும். இது குழந்தையின் வளர்ச்சிக்கும் நோய் எதிர்ப்புச் சக்திக்கும் பெரிதும் உதவுகின்றது. தாய்ப்பால் எளிதில் சமிபாடு அடையக்கூடிய உணவாகும். குழந்தையின் உடலுக்குள் நன்கு அகத்துறிஞ்சப்படும் தன்மை கொண்டது. தாய் மற்றும் குழந்தைக்கு இடையில் பாசப் பிணைப்பையும் அரவணைப்பையும் ஏற்படுத்துகின்றது. ஆறு மாதங்கள் கடந்த பின்னர் தாய்ப்பாலைத் தவிர, இதர உணவுகளை வழங்க முடியும். ஒரு வயது பூர்த்தியடையும்போது குடும்பத்தில் ஏனையவர்கள் உட்கொள்ளும் உணவுகளுக்கு பழக்கப்படுத்திக் கொள்ள முடியும்.

## 1-5 வயதான குழந்தைகள்

இந்த வயதுக் குழந்தைகளுக்கு அடிக்கடி உணவின் சுவையில் மாற்றம் தேவைப்படுகின்றது. அத்துடன், இவர்களின் கல்லீரலும் சிறியதாகவே காணப்படும். அதனால், சிறியளவு உணவு அவர்களுக்கு நிறைவைத் தரும். அவர்களின் உடலுக்கு ஏற்ற போஷாக்குத் தேவையை ஈடுசெய்ய நாளாந்தம் அடிக்கடி உணவுகளை வழங்க வேண்டியிருக்கின்றது. மேலும், போஷாக்கானதும் பலதரப்பட்டதுமான உணவுகளை வழங்குவதும் அவசியமாகும். இந்த வயதில் குழந்தைகள் பல உடல் இயக்க செயற்பாடுகளில் ஈடுபடுவர். இதனால், அவர்களின் உடல் சக்தித் தேவைக்கு ஏற்ப சத்தான உணவுகளை வழங்கவேண்டும். சோறு, தானியங்கள், கிழங்கு, சக்கரைக் கிழங்கு, அரிசி மா, கோதுமை மா உணவுகள் என்பன உடலுக்கு வலிமை தரும் உணவுகளாகும். இக்காலப்பகுதியில் குழந்தையின் எலும்புகள் தசை வளர்ச்சிக்கு புரோட்டீன், கல்சியம், இரும்பு என்பன அதிகம் தேவையாகின்றது. பால் மற்றும் பால் சார்ந்த உணவுகளை உட்கொள்ளும்போதும், சிறிய வகை மீன்களை உட்கொள்ளும்போதும் எலும்புகள் பலமடைகின்றன. இதனால், எதிர்காலத்தில் 'ஒஸ்டியோபுரோசிஸ்' தாக்கம் ஏற்படாமல் தடுக்கலாம்.

## 5-10 வயதான பிள்ளைகள்

ஓர் ஒழுங்கு முறையிலேயே இவ் வயதில் பிள்ளைகளின் வளர்ச்சி இடம்பெறுகின்றது. பாடசாலை செல்ல ஆரம்பிக்கும் காலம் என்பதால், அதற்கேற்ப உடலின் சக்திப் பெறுமானமும் இருக்க வேண்டும். பாடசாலை செல்லும் அவசரத்தில் காலை உணவினைத் தவிர்த்தல் என்பது போஷாக்கு குறைவடைவதற்கு முக்கிய காரணமாக அமைகின்றது. அத்துடன், இரவு நித்திரைக்குச் சென்று காலையில் நித்திரையிலிருந்து எழும்பும் வரையில் நாம் உணவின்றி இருக்கின்றோம். இதனால், காலையில் எமது போஷாக்கு மட்டம் மிகவும் குறைவாகவே காணப்படும். இந்த போஷாக்கு மட்டத்தினை அதிகரிப்பதற்கு பால் அருந்துவது மட்டும் போதுமானதல்ல. நல்ல ஆரோக்கியமான உணவுகளையும் உண்ண வேண்டும். மாறாக, காலை உணவை நாம் தவிர்ப்பதனால்,

### தினசரி உணவுவேளை எவ்வாறு அமைய வேண்டும்?




*தினசரி உணவு வேளையில் இருக்க வேண்டிய உணவு வகைகள் இங்கு வழங்கப்பட்டுள்ளன*

**ஆரோக்கியமான உணவுப் பழக்கமானது, தொற்றும் மற்றும் தொற்றாத நோய்களிலிருந்து உங்களைப் பாதுகாக்கும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உற்சாகமின்மை ஏற்படும். இது கற்றலுக்கு பெரும் தடையாகவே அமைகின்றது. இதனால், காலையில் போஷாக்கான உணவினை உட்கொள்வது மிகவும் அவசியமாகும். மேலும், இக்காலப்பகுதியில் பிள்ளைகள் சமூகத் தொடர்பைப் பேணுவதால் நோய்கள் தொற்றும் ஆபத்தும் அதிகமாகும். இதனால், பாதுகாப்பான உணவுகளை உட்கொள்வதே அவசியமாகும்.

வேறுபாட்டிற்கு ஏற்ப மாறுபடும். பொதுவாக, இளம்பராய ஆண் பிள்ளைகளுக்கு நாளாந்தம் 2300-3300 வரையான கலோரிச் சத்து அவசியமாகும்.இதேவேளை, பெண் பிள்ளைகளுக்கு 2100-2500 வரையான கலோரிச் சத்து தேவைப்படுகின்றது. இதன்படி, பெண் பிள்ளைகளை விட ஆண் பிள்ளைகளுக்கே அதிக கலோரிச் சத்து தேவையாகின்றது.

நோய், அதிக இரத்த அழுத்தம் ஆகிய நோய்கள் ஏற்படக்கூடும். இந்த உணவுகளில் போதுமான போஷாக்கின்மை காரணமாக போஷாக்குப் பற்றாக்குறையும் ஏற்படக்கூடும். இளம்பருவத்தில் பிள்ளைகள் தமது வெளிப்புறத் தோற்றம் குறித்து அக்கறை காட்டுவது பொதுவான விடயமாகும். இவ்வாறான துரித உணவுகளை உட்கொள்வதனால், உடல் நிறை அதிகரித்து மனரீதியிலான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. போஷாக்கான உணவுகளை சரியான முறையில் உட்கொள்வதனால், இளம்பராயத்தினரின் போஷாக்குப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும்.

# தெரிவு செய்வோம்!



காய்கறிகள், பழங்கள், கீரை வகைகள் என்பன பாதுகாப்பான உணவு வகைகளாகும்.

## இளம் பருவத்தினரின் போஷாக்குத் தேவைகள்

10 முதல் 19 வயதான பிள்ளைகள் இளம் பருவத்தினராவர். இது வாழ்க்கையின் மிகவும் முக்கியமான காலகட்டமாகும். இந்த வயதில் மனதளவிலும் உடல் ரீதியிலும் பெரும் வேறுபாடுகள் ஏற்படும். இதனால், போஷாக்குத் தேவைகளும் ஆண், பெண்

பெண் பிள்ளைகளின் கலோரிச் சத்து தேவை, 11 முதல் 14 வயதுகளிலேயே அதிகரிக்கின்றது. 15 முதல் 18 வயதுகளில் ஆண் பிள்ளைகளின் கலோரித் தேவை அதிகரிக்கின்றது. சக்தி தரும் உணவுகளை உட்கொள்வதனூடாக இச்சக்தி தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும். இந்த வயதில் உடலில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக உடலுக்கு அதிகளவு இரும்புச் சத்து தேவைப்படுகின்றது. இந்த வயதைச் சேர்ந்த பெண் பிள்ளைகளுக்கு நாளாந்தம் 10-15 மில்லி கிராம் இரும்புச் சத்து அவசியமாகும். இது ஆண் பிள்ளைகளுக்குத் தேவையான இரும்புச் சத்து அளவினை விட அதிகமாகும். இளம்பராயத்தில் எலும்புகள் அதீத வளர்ச்சியடைவதனால், கல்சியம் அதிகமான உணவுகளை உட்கொள்வதும் அவசியமாகும்.

## இளம்பராயத்தினரின் போஷாக்குப் பிரச்சினைகள்

இளம்பராயத்தினர் தற்போது துரித உணவுகளை அதிகளவில் உட்கொள்வதற்கு ஆர்வம் காட்டி வருகின்றனர். இவ்வாறான உணவுகளில் மாச்சத்தும் கொழுப்புச்சத்தும் அதிகமாகக் காணப்படுகின்றது. இவற்றை அடிக்கடி உண்பதால், உடல் எடை அதிகரித்தல், நீரிழிவு

## வயது வந்தோர்

வயது வந்தோருக்கு உடலுக்குத் தேவையான சக்தியின் அளவு குறைவடைகின்றது. இதனால், சக்தி தரும் உணவுகளை ஒரு கட்டுப்பாட்டுடன் உட்கொள்வதே சிறந்ததாகும். ஆனாலும், இந்த வயதில் புரோட்டீன், விற்றமின், இரும்புச் சத்து மற்றும் கல்சியத்தின் தேவைகள் அவ்வாறே இருக்கும். எலும்புகள் பலவீனமடைதல், உடைதல் ஆகிய பிரச்சினைகளை இந்த வயதில் எதிர்கொள்ள நேரிடும். இந்த பிரச்சினைகளைத் தவிர்க்க கல்சியம் அதிகம் உள்ள உணவுகளை உட்கொள்வது அவசியமாகும். வயது வந்தோர்களாகும்போது நீரிழிவு, அதிக இரத்த அழுத்தம், இதய நோய்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் அதிகமாகும். இதனால், சீனி, உப்பு, கொழுப்பு அதிகமுள்ள உணவுகளைக் கட்டுப்பாட்டுடன் உட்கொள்ள வேண்டும்.



# 'பிட்சா' பிறந்த கதை

பீட்சா, பிசா, பிச்சா என பலவாறு அழைக்கப்படும் பிட்சா (Pizza) தற்போது நாகரிக உணவுகளின் அடையாளங்களில் ஒன்றாகவே பார்க்கப்படுகிறது. ஆனால், உண்மையில் இந்தப் பிட்சா இன்று நேற்றுப் பிறந்த நவநாகரிக உணவல்ல. பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, கிரேக்கர்கள் இதனை உண்டு மகிழ்ந்திருக்கிறார்கள். ஆனால், இத்தாலி நாட்டு ராணி ஒருவர் இதனை உண்டதன் பின்னர்தான் இதற்கு உலகப் புகழ் கிடைத்தது என்பது ஒரு சுவாரஸ்யமான கதையாக உள்ளது.

1889 ஆம் ஆண்டில், ஒருநாள் இத்தாலி நாட்டு ராணி மெர்கரிட்டா, தனது கணவர் உம்பர்டோவுடன் நகர்வலம் வந்துகொண்டிருந்தார். அப்போது குடிமக்கள் பலரும் தட்டையான ரொட்டி ஒன்றை மிகவும் ரசித்து ருசித்து உண்பதைப் பார்த்தார். தானும் ஒரு ரொட்டியை வாங்கிச் சாப்பிட வேண்டும் என்று ஆசை கொண்டார். அப்படியே அதனை வாங்கிச் சாப்பிட்ட போது அதன் ருசியில் அவர் மயங்கிப் போனார். அதனை அப்படியே அரண்மனைக்கு எடுத்து வந்துவிட்டார்.



அரண்மனையின் தலைமை சமையல் கலைஞர் ரஃபேல், ஏழைகளின் இந்த எளிய உணவுக்கு மேலும் மெருகூட்டினார். சிவப்பு நிறத் தக்காளி, வெள்ளை நிற பாலாடைக் கட்டி, பச்சைத் துளசி போன்றவற்றை ரொட்டியின்மீது தூவி இத்தாலியின் தேசியக் கொடி போன்று பிட்சாவை உருமாற்றி விட்டார்.

அதற்கு 'மெர்கரிட்டா பிட்சா' என ராணியின் பெயரையும் சூட்டிவிட்டார். இவ்வாறு உள்நாட்டில் பிரபலமான பிட்சா, இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உலகைச் சுற்ற ஆரம்பித்துவிட்டது. இத்தாலிக்குள் நுழைந்த அமெரிக்க மற்றும் ஐரோப்பிய படை வீரர்களை பிட்சா மோகம் பிடித்துவிட்டது. ஒரு துண்டை வாயில் போட்டவுடனேயே அதன் சுவைக்கு அந்த வீரர்கள் அடிமையாகிவிட்டார்கள். அவர்கள் போர் முடிந்து நாடு திரும்பும்போது பிட்சாவையும் தங்கள் நாடுகளுக்கு எடுத்துச் சென்றனர். அவ்வளவுதான் சர்வதேச தரத்தில் பெப்ரவரி 9 ஆம் திகதி 'உலக பிட்சா' தினமாக கொண்டாடும் அளவுக்கு பிட்சா உயர்ந்துவிட்டது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிதம்

பெயர்: ..........................................................

01) முதல் பத்து வினாக்களுக்கும் சரியான விடையை தெரிவுசெய்து அதன்கீழ் கோடிடுக.


01. கீழ்காணும் பழங்களை இரண்டாகப் பிரிக்கலாம். அதற்கமைய, இத்தொகுதியில் சரியான விடையை தெரிக.



A B C D

1. AB, CD 2. AC, BD 3.AD, BC

02. கீழ்காணும் பழங்களை மூன்று தொகுதிகளாகப் பிரிக்கலாம். அதற்கமைய, பொருத்தமான தொகுதியை தெரிவுசெய்க.




A B C D E F

1. AC, BD, EF 2.AF, BE, CD 3. AB, CF, DE


★ அடுத்து வர வேண்டிய உருவை தெரிவுசெய்க.

03.



1. 2. 3.

04.



1. 2. 3.

05. 25, 50, 75, ............... இடைவெளியில் வர வேண்டிய எண்;

1. 80 2. 100 3. 125


06. இரண்டு சம பக்கங்களைக்கொண்ட தள உருவம் யாது?

1. சதுரம் 2. செவ்வகம் 3. முக்கோணம்

07. 10m நீளமும் 8m அகலமும் கொண்ட செவ்வகக் காணியின் பரப்பளவு யாது?

1. 80m 2. 36m 3. $80m^2$

08.




அருகிலுள்ள கடிகாரம் காட்டி நிற்கும் நேரம் யாது?

1. 3:00 2. 5:00 3. 4:00

09. 2kg பருப்பின் விலை ரூபா 160 எனின், 500g பருப்பின் விலை யாது?

1. ரூபா 20 2. ரூபா 80 3. ரூபா 40

10.



இவ்வுருவை பற்றிய சரியான கூற்று;

1. இரு சமபக்க முக்கோணி 2. சமபக்க முக்கோணி 3. முக்கோணி




02) பின்வரும் வினாக்களுக்கான சரியான விடையை இடைவெளியில் எழுதுக.

01. 2.5kg ஐ கிராமில் தருக. ..................................................

02. கூட்டுக. 573+765= ..................................................

03. கழிக்க. 753-309 = ..................................................

04. 5.04 +2.19 ______

05. 3.01 - 1.32 ______

06. கமலா, ரூபா 230 இற்கு ஒரு புத்தகத்தை வாங்கி, வியாபாரியிடம் ரூபா 300 ஐ கொடுத்தாள் எனின், வியாபாரி மீதியாகக் கொடுக்க வேண்டிய பணம் யாது? ..................................

07. மூன்றாவது முக்கோணி எண் யாது? ..................................

08. வீட்டிலிருந்து காலை 6: 55 இற்குப் புறப்பட்ட கண்ணன், காலை 7:25 இற்கு பாடசாலையை அடைந்தான் எனின், அவன் பாடசாலையை அடைய எடுத்த நேரம் யாது? ..........

09. நாளை திங்கட்கிழமை எனின், நேற்று என்ன கிழமை? ..................................

10. சூரியன் மறையும் திசைக்கு எதிர்த்திசை எது? ..................

11. மோட்டார் சைக்கிள் ஒன்று 5km தூரத்தைக் கடப்பதற்கு 15 நிமிடங்கள் எடுத்தது. அந்த மோட்டார் சைக்கிள் அதே கதியில் 10km தூரத்தைக் கடப்பதற்கு எவ்வளவு நேரம் எடுக்கும்? ..................................

12. ஒரு பூங்கொத்தில் ஆறு பூக்கள் காணப்பட்டன எனின், அவ்வாறான 13 கொத்துகளில் உள்ள பூக்களின் எண்ணிக்கை யாது? ..................................

03) அருகில் தரப்பட்டுள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி விடை தருக.

| 8 9 |
|---|
| 3 |

01. ஆக்கக்கூடிய மிகப் பெரிய எண் எது? ..........................

02. ஆக்கக்கூடிய மிகச் சிறிய எண் யாது? ..........................

03. மிகப் பெரிய எண்ணுக்கும் மிகச் சிறிய எண்ணுக்கும் இடையிலான வித்தியாசம் யாது? ..........................

04. மூன்று எண்களையும் பயன்படுத்தி ஆக்கக்கூடிய வேறு மூன்று எண்கள் தருக. ..........................

05. நீங்கள் ஆக்கிய எண்களை ஏறுவரிசைப்படுத்துக. ..........................

06. நீங்கள் ஆக்கிய எண்களை இறங்கு வரிசைப்படுத்துக. ..........................

04) கீழே உள்ள உருவை அவதானித்து, விடை தருக.

9cm



8cm

01. இவ்வுருவின் தளவடிவம் யாது? ..................

02. இவ்வுருவின் சுற்றளவு யாது? ..................

03. உருவின் பரப்பளவு யாது? ..................

04. உருவில் காணப்படுவது எவ்வகையான கோணம்? ..................

05. உருவை இரு சமபகுதிகளாகப் பிரித்தால், அதன் ஒரு பகுதியின் பரப்பளவு யாது? ..................................

கடந்தவார விடைகள்... 20 ஆம் பக்கத்தில்

(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











# பத்திரிகையை தக்கவைத்துக் கொள்வதை முக்கிய கவனமாகக் கொள்ளல்

கட்டுரை எழுதுகையில் கையாளவேண்டிய சில அம்சங்களை கடந்த வாரம் பார்த்தோம். இதில் சில விடயங்களையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும். அதாவது, கட்டுரை தனது சுய கண்ணோட்டத்தில் எழுதுகின்ற போதிலும், குறித்த கட்டுரை இடம்பெறுகின்ற பக்கத்திற்கு பொறுப்பான ஆசிரியர் மற்றும் இணை ஆசிரியர் ஆகியோரின் மேற்பார்வையும் இந்தக் கட்டுரையில் இருந்தாக வேண்டும். ஏனென்றால், கட்டுரையாளர் தமது கருத்துக்களை ஆளுமையை முன்வைக்கும் சுதந்திரம் உள்ளபோதிலும், சில கட்டுக்கோப்புக்களையும் அவர் பின்பற்றியாகவேண்டும். அதாவது, பிரதானமாக பத்திரிகை நிறுவனத்திற்கு பாதிப்போ, பங்கமோ நேர்ந்திடாதவாறு பொறுப்புணர்வுடன் கட்டுரையை அமைத்தல் வேண்டும். முதலில் ஒரு பத்திரிகையின் இருப்பை தற்காத்துக்கொள்ளுதல் வேண்டும். அந்த இருப்பை காத்துக்கொண்டால்தான் சமூக அக்கறைமிகு விடயங்களை பிரசுரிப்பதற்கு ஒரு பத்திரிகை இருக்கும் என்பதை மனதில் இருத்திக் கொள்ளுதல் வேண்டும்.



## சந்தேகங்களை தீர்த்துக்கொள்ளல்

செய்தியாளரும் சரி, உதவி ஆசிரியரும் சரி அல்லது அதற்கு மேல்நிலைப் பதவியில் உள்ளவர்களும் சரி முக்கியமான ஒரு விடயத்தில் கவனமாக இருத்தல் வேண்டும். அதாவது, செய்திகளையோ, கட்டுரைகளையோ, எழுதும்போதோ, எடிட் செய்யும் போதோ, எழுதப்பட்டுள்ள விடயம் தொடர்பாக சந்தேகங்கள், தெளிவின்மை ஏற்படும் சந்தர்ப்பங்கள் பல ஏற்படலாம். இதன்போது, மற்றவர்களிடம் வெட்கப்படாமல், கௌரவப் பிரச்சினை பார்க்காமல் இச்சந்தேகங்களை கேட்டுத் திருத்திக் கொள்ளவேண்டும்.

வசனமொன்றை எழுதுகையில் எழுத்துப் பிழை வரக்கூடிய சந்தர்ப்பங்கள் இருப்பின், அருகில் இருப்பவர்களிடம் சரியான எழுத்துக்களை கேட்டுத் தெரிந்து செய்வதில் தப்பில்லை. அது போலவே சில தரவுகள், விடயதானங்களிலும் எழுதப்பட்டுள்ள விபரமானது சரியா, பிழையா என்ற சந்தேகங்கள் எழலாம். உதாரணத்திற்கு மூன்றாம் தவணைக்காக பாடசாலைகள் செப்டெம்பர் 2 ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகும் என்றவோர் செய்தி உள்ளதென வைத்துக்கொள்வோம். இதன்போது 2 ஆம் திகதி சரிதானா? என்ற சந்தேகம் எழுமானால், மற்றவர்களிடம் இதனை கேட்டுத் தெரிந்துகொண்டு சரியான திகதியை உறுதிப்படுத்திக்கொண்டு அதனை திருத்திக் கொள்ளவேண்டும்.

இப்படியான சந்தேகங்கள் ஏற்படுகையில் இயன்றவரையில் மற்றவர்களிடம் கேட்டுத் திருத்திக்கொள்வதில் கூச்சப்படக் கூடாது. ஏனென்றால், பிழை திருத்தப்படாமல் பிழையான விபரங்களுடன் செய்தி பிரசுரமானால், அது பத்திரிகையின் நம்பகத்தன்மைக்கே பாதிப்பை ஏற்படுத்திவிடும்.

(தொடரும்)

-ரிஷபன்



வெல்லுங்கள்!

விஜய் – TOP NEWS இணைந்து வழங்கும் வாரம் ஒரு 8GB Pen Drive பரிசு!!



பிரதி புதன்கிழமைகளில் 'TOP News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை இவ்வார 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் DIALOG தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

'TOP News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி அனுப்புதல் வேண்டும். கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்குத் தெரிவுசெய்யப்படும். சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாகத் தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாரம் ஒரு 8GB Pen Drive பரிசாக வழங்கப்படும்.

*13.08.2014* TOP News கேள்விக்கான விடை:
8848 மீற்றர்

Pen Drive வெற்றியாளர்:
எஃப்.ஷஃப்னியா,
221/1, குறுந்துகஹஎல,
அக்குறணை.

அனுப்பவேண்டிய முகவரி:

Pen Drive
(27.08.2014)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

'TOP News' SMS செயற்படுத்தும் முறை:




இச்சேவையின் ஊடாக ஆங்கிலம், சிங்களம் கற்பதோடு வேலைவாய்ப்பு ALERT களையும் பெறமுடியும்.

இவ்வார கூப்பன்:
27.08.2014

விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தொ.பே.இல:......................
பாடசாலை:......................
தரம்: ..............................
..............................
கையொப்பம்

Digitized by Noolaham Foundation.

# தெருக்களை அமைப்பதில் பங்களிப்புச் செய்தோர்

இலங்கைக்கு பெருந்தெருக்கள் கண்டிப்பாக அவசியம் என்பதை ஆள்பதி பான்ஸ் உணர்ந்தார். அவரும் மேஜர் ஸ்கினர் ஆகியோரதும் நாமங்கள் இலங்கை வரலாற்றில் பெருந்தெருக்கள் அமைத்தல் தொடர்பாக என்றும் நிலைத்துள்ளன. இலங்கையின் துணை ஆள்பதியாகவும் பின்னர் ஆள்பதியாகவும் நியமிக்கப்பட்ட பாண்ஸ் அவர்களால் இந்நாட்டின் சகல பிரதேசங்களுக்கும் பெருந்தெருக்கள், துரிதமாக அமைக்கப்பட்டன.

அக்காலத்தில் மலைநாட்டிற்கே விரைவாகப் பாதைகளை அமைக்க வேண்டிய தேவை இருந்தது. மலையகப் போக்குவரத்திற்காக பாதைகள் இல்லாதிருந்தமையால்தான் கிளர்ச்சியை அடக்கத் தாமதம் ஏற்பட்டது. மலைநாட்டு மன்னர்கள் தமது இராசதானியை எதிரிகளிடம் இருந்து பாதுகாப்பதற்காக இராசதானியின் எல்லையில் இருந்த அடர்ந்த காடுகளை அழிக்காமல் விட்டிருந்தனர். அதனால், மலையக இராச்சியத்தை ஆக்கிரமிக்கும் பொருட்டு சென்ற எதிரிகளின் சேனைகள் இக்காடுகளை அழிக்க முற்பட்ட பொழுது கடினமான நிலைகளை எதிர்கொண்டனர். அக்காலத்தில் அந்த காடுகளின் மத்தியில் செல்வதற்கு சிறிய ஒற்றையடிப் பாதைகள் பயன்பட்டன. அவற்றின் பாக்கு மற்றும் வேறு வர்த்தகப் பொருட்களை வர்த்தகர்கள் கழுதைகள் மூலமாக கொண்டு வந்தனர்.

மலையகத்திற்குச் சென்ற தமது படையணிகளுக்கு பொருட்களை எடுத்துச் செல்ல கூலியாட்களைப் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. கி.பி 1817 ஆம் ஆண்டு பிரவுன்றிக் ஆள்பதி அவர்கள் 85 மைல் நீளமான பாதையிலேயே கண்டிக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. கொழும்பிலிருந்து அவிசாவளைக்கு ஒல்லாந்தர்கள் அமைத்த பாதை ஒன்றும் அக்காலத்தில் இருந்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சூரியனும் சந்திரனும் அளவில் சமமானவையா?



நாம் பூமியில் இருந்து பார்க்கும்போது, சூரியனும் சந்திரனும் ஒரே அளவினைக் கொண்டதாகவே நமக்குத் தென்படுகின்றன. சந்திரனின் விட்டத்தினைவிட, 400 மடங்கு விட்டம் கொண்டதாக சூரியன் இருப்பதோடு, அது பூமியிலிருந்து சந்திரன் இருக்கும் தூரத்தைப் போன்று 400 மடங்கு தூரத்தில் அமைந்துள்ளது. இந்த இரண்டு தன்மைகளுமே இந்த இரு விண்வெளி வஸ்துக்களும் ஒரே அளவினை கொண்டதைப் போன்று நமக்குத் தென்படக் காரணமாக உள்ளன.


இந்த பிரதான காரணங்களின் அடிப்படையிலேயே சுமார் 3,476 விட்டம் கொண்ட சந்திரனால், சுமார் 1,392,000 கி.மீற்றர் விட்டம் கொண்ட மிகப் பெரிய விண்வெளி வஸ்துவான சூரியனை பூரண சூரிய கிரகணத்தின்போது முழுமையாக மறைத்துவிட இயலுமாக உள்ளது.

சூரிய குடும்ப கோள்களின் உபகோள்களில் பூரண சூரிய கிரகணத்தின் போது, சூரியனை முழுமையாக மறைக்கக்கூடிய ஆற்றல் கொண்ட ஒரே ஓர் உபகோளாக பூமியின் உபகோளான சந்திரனைக் குறிப்பிட முடியும். எமது சூரிய குடும்பத்திலுள்ள பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ் மற்றும் நெப்டியூன் ஆகிய கிரகங்களுக்கு பெரிய-சிறிய அளவுகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான உபகோள்கள் இருக்கின்றபோதிலும், அவற்றில் பூமியின் உபகோளான சந்திரனைத் தவிர, வேறு எவற்றாலும் நாம் காணும் அளவுக்கு முழுமையான சூரிய கிரகணத்தை உருவாக்க முடியாது. இதற்குக் காரணம், சூரியனை மறைக்கும் அளவினைக் கொண்டதாக சில உபகோள்கள் இல்லாமையும், சில உபகோள்கள் அளவில் பெரிதாக இருப்பதுமே ஆகும்.





இலங்கையர்களாகிய எமக்கு இன்னும் இரண்டு வருடங்களில் அதாவது 2016 மார்ச் 9 ஆம் திகதி அரை சூரிய கிரகணத்தை பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் கிட்டவுள்ளது. அவ்வாறே, சுமார் 59 ஆண்டுகளுக்கு முன்னர்தான் அதாவது 1955 ஜூன் 29 ஆம் திகதியே பூரண சூரிய கிரகணமொன்றை மீண்டும் காணும் வாய்ப்பு எமக்குக் கிட்டியுள்ளது. அதற்கமைய, இவ்வாறானதொரு சூரிய கிரகணத்தை மீண்டும் 2070 ஏப்ரல் 11 ஆம் திகதி காண முடியும் என்று தெரிவிக்கப் படுகின்றது. பூரண சூரிய கிரகணத்தின் மத்திய ரேகை தெனியாய,உனவட்டுன, யால சரணாலயம் மற்றும் கிரிந்த ஆகிய பகுதிகளுக்கூடாக விழவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




சூரிய கிரகணம் உருவாகும்போது, அடிப்படையாக அமைகின்ற, பூமியில் இருந்து சூரியனுக்கு உள்ள பொதுவான தூர அளவு 149, 597, 870 கி.மீற்றர்களாகும். இந்த தூர அளவானது, ஒரு வானியல் விஞ்ஞான அலகாகக் கருதப்படுகின்றது.

இதன்படி, சூரியனில் இருந்து புதன் கிரகத்திற்கான வானியல் விஞ்ஞான அலகு 0.38 ஆகவும் ஏனைய கிரகங்களான வெள்ளிக்கு 0.73, பூமிக்கு 1.0, செவ்வாய்க்கு 1.53, வியாழ னுக்கு 5.20, சனிக்கு 9.54, யுரேனஸுக்கு 19.19, நெப்டியூனுக்கு 30.06 என்ற அடிப்படையில் வானியல் விஞ்ஞான அலகுகள் காணப்படுகின்றன.

சூரியக் குடும்பத்தின் அனைத்து கிரகங்களுக்கும் ஒளியை வழங்கும் சூரியனின் மேற்பரப்பில் நிலவும் வெப்ப நிலையின் அளவு 5,500°C ஆகும். சூரியனின் மையப் பகுதியில் நிலவும் வெப்பநிலை 15,000,000°C ஆகும். சூரியனின் மத்தியில் நிலவும் வெப்பநிலையானது, அதன் மேற்பரப்பில் நிலவுமாயின், சூரியத் தொகுதிக்குட்பட்ட எந்தக் கிரகத்திலும் ஒரு துளி நீரேனும் இருக்காது. அதுவும், பூமியில் எந்தவோர் உயிரினங்களோ, பச்சைத் தாவரங்களோ, நீர்நிலைகளோ இருக்க மாட்டாதென வானியல் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.


-அஷ்விதா

*வெப்பநிலையானது, அதன் மேற்பரப்பில் நிலவுமாயின், சூரியத் தொகுதிக்குட்பட்ட எந்தக் கிரகத்திலும் ஒரு துளி நீரேனும் இருக்காது.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகளாவிய ரீதியில் நிகழும் வெப்பநிலை அதிகரிப்பானது, இன்றளவில் உலக மக்கள் எதிர்நோக்கும் பெரும் பிரச்சினையாக உள்ளது. இந்த வெப்பநிலை அதிகரிப்புக் காரணமாக மக்கள் பாதிப்புக்களையும் ஆபத்துக்களையும் எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. கடந்த மே மற்றும் ஜூன் மாதங்களில் உலக வெப்பநிலை முன்னெப்போதும் இல்லாதவாறு உயர்வடைந்திருந்ததாக அமெரிக்காவின் 'தேசிய கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகம்' எனும் நிறுவனம் கடந்த வாரம் அறிவித்திருந்தது. இந்த வெப்பநிலை அதிகரிப்பானது, எதிர்வரும் மாதங்களில் அசாதாரண காலநிலை மாற்றங்களை ஏற்படுத்தும் என்றும் பசுபிக் மற்றும் இந்து சமுத்திரங்களில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தும் என்றும் சர்வதேச விஞ்ஞானிகளும் அச்சம் வெளியிட்டுள்ளனர்.




## பொறுப்புக்கூற வேண்டியது யார்?

இவ்வாறு துரித கதியில் நிகழும் வெப்பநிலை அதிகரிப்பானது, இந்து மற்றும் பசுபிக் சமுத்திரங்களில் விசேட மாற்றங்களை ஏற்படுத்தும் என்றும், அண்டார்க்டிக்கா, நியூஸிலாந்து, தென் அமெரிக்கா, கிறீன்லாந்து, மத்திய ஆபிரிக்கா மற்றும் இலங்கை உட்பட, தெற்காசிய நாடுகளில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், பூமியின் வெப்பநிலை இவ்வாறு அதிகரிப்பதற்கும், காலநிலையில் ஏற்படும் மாற்றங்களுக்கும் மனிதர்களே பொறுப்புக்கூற வேண்டும் என்று இத்துறைசார் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.





# வெப்பமடையு
# பாதிப்புக்களை எதிர்

## முன்னெப்போதும் இல்லாதவாறு அதிகரிக்கும் வெப்பநிலை

கடந்த மே மற்றும் ஜூன் மாதங்களில் முன்னெப்போதும் இல்லாதவாறு வெப்பநிலை அதிகரித்திருந்ததாக குறித்த நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த வெப்பநிலையானது, 61.20°F (16.22°C) ஆகக் காணப்பட்டுள்ளது. இதற்கு முன்பு 2010 இல் உலகளாவிய ரீதியில் வெப்பநிலை அதிகரித்திருந்தது. எனினும், 2010 இல் இருந்த அளவைவிட, 2014 மே மற்றும் ஜூன் மாதங்களில் நிலவிய வெப்பநிலை 1.30°F (0.72°C) இனால் அதிகரித்துக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




## மனித செயற்பாடுகள்

இந்த காலநிலை மாற்றத்திற்கும் இயற்கைப் பேரழிவுகளுக்கும் 99 சதவீதம் மனித செயற்பாடுகளே காரணமாகும். நிலக்கரி எரிப்பு, இயற்கை வாயு எரிப்பு, எரிவாயுத் தகனம் ஆகிய செயற்பாடுகளும் இதில் அடங்கும். இந்த செயற்பாடுகள் எமது வளிமண்டலத்தின் காபனீரொட்சைட்டின் அளவை அதிகரித்துவிடுகின்றன. காபனீரொட்சைட்டானது, சூரிய கதிர்களை அதிகளவில் வளிமண்டலத்திற்குள் உறிஞ்சி சேமித்துக்கொள்கின்றது. புவி வெப்பமடைதல் அல்லது உலக வெப்பநிலை அதிகரிப்புக்கு இது போன்ற செயற்பாடுகளே காரணமாக அமைகின்றன. தவிர, மனித தேவைகளுக்காக காடுகள் அழிக்கப்படுதலும் வெப்பநிலை அதிகரிப்புக்கு காரணமாக உள்ளது. உலக வெப்பநிலை அதிகரிப்பினால் ஏற்படும் காலநிலை மாற்றம் மற்றும் பனிமலைகள் உருகி கடல்நீர் மட்டம் உயர்வடைதல் போன்ற காரணங்களினால், 2060 ஆம் ஆண்டில் பூமியில் இருந்து மனித இனம் முற்றாக அழிந்துவிடும் அபாயம் உள்ளதென விஞ்ஞானிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.



## எல் நினோ

எல் நினோ (El Nino) என்பது, குறிப்பிட்ட சில வருடங்களுக்கு ஒருதடவை பசுபிக் சமுத்திரத்தின் மேற்பரப்பில் இடம்பெறும் முக்கியமான வெப்பநிலை ஏற்றத்தாழ்வு ஆகும். லத்தீன் அமெரிக்காவின் பேரு, ஈக்வடோர் மற்றும் தெற்கு அமெரிக்க பகுதிகளின் கரையோரப் பகுதிகளில் வழமைக்கு மாறான வெப்பத்தை இதன்போது உணரலாம். வருடம் ஒன்றின் டிசம்பர் மாதத்தில் இந்த மாற்றம் நிகழும். ஆரம்பத்தில் சில வருடங்களுக்கொரு தடவை இந்த மாற்றத்தினை அவதானிக்க முடிந்தபோதிலும், எதிர்காலத்தில் வருடத்திற்கொரு தடவையும் இந்த அசாதாரண காலநிலை மாற்றத்தினை காண முடியும் என்று காலநிலை விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். இதன்போது பசுபிக் சமுத்திரத்தின் மேற்பரப்பு நீரின் வெப்பநிலை அதிகரிப்பதனால், லத்தீன் அமெரிக்க நாடுகளில் மட்டுமன்றி, உலகின் பல நாடுகளிலும் மோசமான காலநிலை மாற்றங்கள் எதிர்கொள்ளப்படும் எனக் கூறப்படுகின்றது. எல் நினோ எனும் ஸ்பானிய மொழிச் சொல்லின் அர்த்தம் 'சிறு பையன்' என்பதாகும்.



## பனித்தட்டில் பிளவு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## இயற்கை விபத்துக்கள்

காலநிலை மாற்றம் மற்றும் உலக வெப்பநிலை அதிகரிப்பு குறித்து விஞ்ஞானிகள் ஆரம்பத்திலேயே முன்னெச்சரிக்கைகளை விடுத்திருந்தனர். எனினும், எதிர்பார்த்ததைவிட, மோசமான பெறுபேறுகளே தற்போது கிடைத்துள்ளன. பல்வேறு உலக நாடுகளும் வேகமான தொழிற்துறை வளர்ச்சியினை அடைந்து வருவதே இதற்கான காரணமாகும். உலக வெப்பநிலை அதிகரிப்பானது, மனித சமுதாயத்திற்கு மட்டுமன்றி, தாவரங்களுக்கும் ஏனைய விலங்கினங்களுக்கும் பாரிய பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. காலநிலை மாற்றத்தினால் விவசாயமும் உணவு விநியோகமும் பாதிப்படைகின்றன. மேலும், அடிக்கடி ஏற்படும் நிலநடுக்கம், சூறாவளி, காட்டுத்தீ, வெள்ளப் பெருக்கு போன்ற இயற்கை அழிவுகள் காரணமாகவும் லட்சக்கணக்கான மக்கள் இருப்பிடங்களை இழப்பதோடு, பல்வேறு பாதிப்புகளையும் உயிராபத்துக்களையும் எதிர்கொள்கின்றனர்.



இந்த காலநிலை மாற்றத்திற்கும் இயற்கைப் பேரழிவுகளுக்கும் 99 சதவீதம் மனித செயற்பாடுகளே காரணமாகும்

# டயும் உலகம், எதிர்நோக்குகின்றது...

...களுக்கு ஒருதடவை
...மான வெப்பநிலை
...டோர் மற்றும் தெற்கு
...கு மாறான வெப்பத்தை
...ல் இந்த மாற்றம் நிகழும்.
...றத்தினை அவதானிக்க
...வையும் இந்த அசாதாரண
... விஞ்ஞானிகள் தெரிவிக்
...நீரின் வெப்பநிலை
...ாறி, உலகின் பல நாடுகளி
...ம் எனக் கூறப்படுகின்றது.
...று பையன்' என்பதாகும்.

## ...ல் பிளவு




## லா நினா

குறிப்பிட்ட சில வருடங்களுக்கு ஒரு தடவை மத்திய மற்றும் கிழக்கு பசுபிக் சமுத்திரத்தின் மேற்பறப்பு நீர் குளிர்மையடைவதால் ஏற்படும் அசாதாரண காலநிலை மாற்றமே 'லா நினா' ஆகும். இதனாலும் உலகில் பெரும்பாலான பகுதிகளில் மோசமான காலநிலை மாற்றங்கள் ஏற்படும். லா நினா எனும் ஸ்பானிய மொழிச் சொல்லின் அர்த்தம் 'சிறு பெண்' என்பதாகும். பொதுவாக, எல் நினோவின் பின்னரே லா நினா உருவாகும். ஆனால், எல்லா நேரங்களிலும் இது எல் நினோவுக்கு அடுத்ததாக வரும் என்றில்லை. எல் நினோவுக்கு எதிர்மறையான காலநிலை மாற்றமாக லா நினாவைக் குறிப்பிடலாம்.

## பனித்தட்டில் பிளவு

இற்றைக்கு 5 ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவின் நாஸா நிறுவனம் 'ஐஸ்செட்' (ICE Sat) என்ற செய்மதி ஒன்றை பூமியின் வான்பரப்பில் நிலைநிறுத்தியது. பூமியின் துருவப் பகுதிகளை ஆராயவும் துருவப்பகுதி வளிமண்டலத்தினை ஆராயவுமே இச்செய்மதி ஏவப்பட்டது. 'ஐஸ்செட்' என்பது, 'பனி, முகில், நிலம் என்பனவற்றை ஆராய்தல்' என்று பொருள்படும். இந்த செய்மதிதான் அண்டார்க்டிக்காவின் பாரிய பனித்தட்டொன்றின் பிளவினை படம் பிடித்துக் காட்டியது. அண்டார்க்டிக்காவின் பைன் தீவுப் பகுதிக்குரிய இந்த பனித்தட்டு, பிளவுபட்டு விலகிச் செல்லும் ஆபத்து உள்ளதாக 2009 செப்டெம்பரில் விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

துருவப்பகுதிகளில் உள்ள பனித்தட்டுக்களும் பனிப்பாறைகளும் இவ்வாறு உருகுவதற்கும் பிளவுபட்டு நகர்வதற்கும் காரணம் உலக வெப்பநிலை அதிகரிப்பாகும். எதிர்வரும் 10 ஆண்டுகளில் உலக வெப்பநிலை முன்னெப்போதும் இல்லாதவாறு அதிகரிக்கும் என்று 2009 ஆண்டே விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்திருந்தனர் என்பது இங்கு கவனத்தில் கொள்ளத்தக்க விடயமாக உள்ளது.



கடந்த 1,500 ஆண்டுகளில், சுமார் 320 முள்ளந்தண்டுள்ள உயிரினங்கள் பூமியில் இருந்து அழிந்துவிட்டன

## அழிந்துவிடும் அபாயம்?

மனித செயற்பாடுகள் காரணமாக, உலக வெப்பநிலை அதிகரித்து, திடீர் காலநிலை மாற்றங்கள் ஏற்படுகின்றமையானது, உயிர்ப்பல்வகைமைத்துவத்திற்கு கடுமையான பாதிப்பினை ஏற்படுத்துவதாக உள்ளது. பல உயிரினங்கள் உலகிலிருந்து முற்றாக அழிந்துவிட்டதோடு, அழிவுக்குள்ளாகி வரும் உயிரினங்களும் தற்போது அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. பனிக்கரடிகள், யானைகள், ரைனோக்கள் போன்ற உயிரினங்கள் இந்த பட்டியலில் இணைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மனித செயற்பாடுகள் காரணமாக கடந்த 1,500 ஆண்டுகளில், சுமார் 320 முள்ளந்தண்டுள்ள உயிரினங்கள் பூமியில் இருந்து அழிந்துவிட்டதாகக் கூறப்படுகின்றது.

-பிரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவரங்களுக்கும் காதுகள் உண்டாம்...! இதனால், அவற்றுக்கும் செவிமடுக்கும் திறன் இருப்பதாக அண்மையில் ஒரு தகவலொன்று வெளியாகியது. தாவரங்களுக்கு எப்படி செவிமடுக்கும் திறன் கிடைத்துள்ளது என்பது குறித்து பேராசிரியர்கள் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். தற்போதளவில் இந்த ஆய்வுகள் ஆரம்ப நிலையில் இருந்தாலும், இந்த ஆய்வுகள் மூலம் சில புதிய விடயங்களை அறிந்துகொள்ள முடிந்துள்ளது.





# தாவரங்களுக்கும் செவிமடுக்கும் திறன் உண்டாம்...!

## தாவரங்களின் செவிமடுக்கும் திறன்

கடுகு இனத்திற்குரிய 'Arabidopsis' எனும் தாவரத்திற்கு, பசியால் அவதிப்படும் கம்பளிப்பூச்சிகளின் குரல் கேட்குமாம். 'கோவா வண்ணத்துப்பூச்சி' எனும் கம்பளிப்பூச்சி இனமானது, குறித்த கடுகுச் செடியின் இலைகளை உண்ணும்போது, ஏற்படும் அதிர்வுகளை இந்தச் செடிகள் உணர்ந்துகொள்கின்றன. தாவரங்கள் இவ்வாறு ஒலிகளை உணர்வதற்கு ஒலி அலைகளும் தாவரங்களில் நிகழும் ரசாயன மாற்றங்களும் உதவுகின்றன. தாவரங்கள் தாம் வாழும் சுற்றாடலில் ஏற்படும்



கம்பளிப்பூச்சி இலையை உண்ணும்போது, ஏற்படும் ஒலியை பதிவுசெய்யும் ஒரு சந்தர்ப்பம்.

தமக்குரிய ஒலிகளுக்கு உணர்திறன்களைக் காட்டுவதாக, சான்றுகளுடன் உறுதிப்படுத்தப்பட்ட முதலாவது ஆய்வு இதுவாகும். ஹய்டி எப்பள் மற்றும் ரெட் கொக்ரொஃப்ட் ஆகிய உயிரியல் விஞ்ஞான பேராசிரியர்கள் இருவரும்தான் இந்த ஆய்வில் ஈடுபட்டனர். அவர்கள் லேசர் கதிர்களையும் ஒலியை பதிவு செய்வதற்கான சிறிய உபகரணமொன்றையும் இந்த ஆய்வின்போது பயன்படுத்திக்கொண்டனர்.

கம்பளிப்பூச்சிகள், குறித்த செடியின் இலைகளை உண்ணும்போது, வெளியிடும் உணர்திறனை ஒலிப்பதிவு செய்வதற்காக, அந்த உபகரணத்தை ஒரு கடுகுச் செடியின் இலைகள் மீது அவர்கள் வைத்தனர். அப்போது குறித்த கடுகுச் செடி உணர்திறனை வெளிப்படுத்தியமை அந்த உபகரணத்தால் உணரப்பட்டிருந்தது. மேலும்-கீழுமாக வேகமாக அசைந்தே அவை தமது உணர்திறனை வெளிப்படுத்தியிருந்தன. இரண்டு தாவரக் குழுக்கள் இந்த ஆய்வில் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தன.

## பெறுபேறுகள்

இந்த ஆய்வின்போது, ஒரு தாவரக் குழுவுக்கு கம்பளிப்பூச்சிகள்



ஆய்வில் ஈடுபடுத்தப்பட்ட கடுகுச் செடி.

அவற்றின் இலைகளைக் கடித்து உண்ணும் ஒலியை இரண்டு மணித்தியாலங்களுக்கு செவிமடுக்கச் செய்தனர். அடுத்த தாவரக் குழுவை இரண்டு மணித்தியாலங்கள் அமைதியாக வைத்திருந்தனர். ஒலியை செவிமடுத்த தாவரக் குழுவானது, அதிக எண்ணெய் தன்மை கொண்ட ஹோர்மோன் ஒன்றை வெளியிட்டது. இது தாவரத்தினால் தமது எதிரிகளுக்கு எதிர்ப்பினைக் காட்ட வெளியிடப்படும் ஹோர்மோனாகும்.

முதலாவது ஆய்வில் பெறுபேறு கிடைத்து குறுகிய காலத்தின் பின்னர், இந்த தாவரங்கள் வேறு ஒலிகளை (காற்று மற்றும் இத்தாவரங்களுக்கு தீங்கு செய்யாத ஜந்துக்களின் ஒலிகள்) செவிமடுக்கும் வகையில் அவர்கள் ஏற்பாடுகளைச் செய்தனர். ஆனால், அந்த ஒலிகளுக்கு குறித்த தாவரங்கள் எந்தவோர் உணர்திறனையும் வெளிக்காட்டவில்லை. அத்துடன், இலையை உட்கொள்ளும் ஒலிக்கு சமமான அதிர்வு எண்களைக் கொண்ட வேறு பூச்சிகளின் ஒலிகளுக்கும் தாவரங்கள் எந்தவோர் உணர்திறனையும் காட்டவில்லை. இதற்கமைய, இத்தாவரங்கள் வேறுபாடுகளை உணர்ந்து, உணர்திறன்களை வெளிப்படுத்தும் ஆற்றலை சிறப்பாகப் பெற்றுள்ளன என்று தெரிய வருகின்றது.

தாவரங்கள் பல விடயங்களுக்கு உணர்திறன்களைக் காட்டுவதனை நாம் அறிவோம். வெளிச்சம், சுற்றுப்புற தன்மைகள், வளிமண்டல மாற்றங்கள் என்பனவற்றுக்கமைய அவை தமது உணர்திறன்களைக் காட்டுகின்றன. தாவரமொன்று, எந்த நேரத்திலும் பெருமளவு



உயிரியல் விஞ்ஞான பேராசிரியர்களான ஹய்டி எப்பள் மற்றும் ரெட் கொக்ரொஃப்ட்.


தகவல்களை உள்வாங்கிக்கொள்கின்றது. இது தாவரங்களால் செவிமடுக்க முடியும் என்பதனை உறுதிப்படுத்தும் மற்றுமொரு காரணியாகும் என்று உயிரியல் விஞ்ஞானியான ஜோன் ஒலொக் கூறுகின்றார்.

## 2013 இல் ஆய்வுகள்

தாவரங்கள், தம்மைச் சூழவுள்ள ஏனைய தாவரங்களின் நல்லவிதமான அதிர்வுகளுக்கும் உணர்திறனை வெளிக்காட்டுவதாக 2013 இல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. தனித்து வளரும் தாவரங்களைவிட ஏனைய தாவர இனங்களுடன் வளரும் தாவரங்கள் மிகவும் ஆரோக்கியமாக உள்ளன என்று இதன்போது கண்டறியப்பட்டுள்ளது. மிளகாய் செடிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் தனித்து வளர்ந்த மிளகாய் செடியினைவிட, கூட்டாக வளர்ந்த மிளகாய் செடிகளில் சிறப்பான வளர்ச்சியைக் காணக்கூடியதாக இருந்தது. அத்துடன், மிளகாய் செடிகள் தமது அயலவர் யார் என்பதனை அறிந்துகொள்ளவும் அதற்கு ஏற்ப உணர்திறனை வெளிக்காட்டவும் கூடியவை என்று அந்த ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.


## தாவரங்களின் தொடர்பாடல்

தாவரங்களின் தொடர்பாடல் குறித்த தகவல்களை அறிவதன்மூலம், மனிதன் பல்வேறு பயன்களை அடைந்துகொள்ளலாம். உதாரணமாக, தாவரங்களுடன் தொடர்பாடலை மேற்கொள்வதனூடாக, அவற்றின் வளர்ச்சியை ஊக்குவிக்க முடிவதுடன், சில தாவரங்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தவும் முடியும். -(பி)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்டங்களில் உள்ள உயர் மலைகள்



## ஆசியா கண்டம் - எவரெஸ்ட்

ஆசியா கண்டத்திலேயே மிகவும் உயரமான மலையாக எவரெஸ்ட் திகழ்கின்றது. இது உலகிலேயே மிகவும் உயரமான மலையாகவும் உள்ளது. இதன் உயரம் 29,032 அடியாகும். திபெத் நாட்டிற்குச் சொந்தமான இமயமலையின் உச்சியில் அமைந்துள்ள எவரெஸ்ட் சிகரத்தை அடைவது மிகப் பெரிய சவாலை வெற்றிகொள்ளும் நிகழ்வாக மலையேறிகள் கருதுகின்றனர். ஏப்ரல் மற்றும் மே மாதங்கள் மலை ஏறுவதற்கு ஏற்ற காலமாக கருதப்படுகின்றது. 1953 இல் முதன்முதலாக இதன் சிகரத்தை மலையேறிகள் அடைந்தனர்.

## ஐரோப்பா கண்டம் - எல்ப்ருஸ் (அல்ப்ஸ்)



18,510 அடி உயரமான எல்ப்ருஸ் மலை ஐரோப்பாவின் மிக உயரமான மலையாகும். 5,642 மீற்றர் உயரமான இந்த மலையானது, ரஷ்ய நாட்டின் ஜோர்ஜியாவில் உள்ள கொகேசஸ் (காக்கஸஸ்) மலைத்தொடரில் அமைந்துள்ளது. மலை ஏறிகள் மிக விரும்பும் மலையாகவும் மலை ஏறுவதில் புகழ்பெற்று விளங்கும் மலையாகவும் இது விளங்குகின்றது. இந்த மலையை ஏறுவதற்கு ஜூன், ஜூலை, ஓகஸ்ட் மாதங்கள் மிகப் பொருத்தமான காலமாகக் கருதப்படுகின்றது. 1874 இல் முதன்முதலாக இந்த மலையில் ஏறி சாதனை படைக்கப்பட்டது.

## அமெரிக்கா கண்டம் - மெக்கின்லி



ஐக்கிய அமெரிக்காவின் அலஸ்கா மலைத்தொடரில் இது அமைந்துள்ளது. 20,327 அடி உயரமான இம் மலையின் உயரத்தை 6,196 மீற்றராகக் கொள்ளலாம். ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் இந்த மலையில் ஏறுவதற்கு ஏற்ற காலநிலை நிலவுகின்றது. 1913 ஆம் ஆண்டு முதன்முதலாக இம்மலையில் ஏறி சாதனை படைத்தனர்.



## அவுஸ்திரேலிய கண்டம் - கொசியுஸ்கோ

கொசியுஸ்கோவை 'பெரிய பிரிப்பு' மலைத்தொடர் என்றும் அழைப்பர். இது அவுஸ்திரேலியாவின் நியு சவுத் வேல்ஸ் எனும் இடத்தில் அமைந்துள்ளது. 7,310 அடி உயரமான இம் மலையின் உயரத்தை 2,228 மீற்றராக கொள்ளலாம். 1834 இல் முதன் முதலாக இந்த மலையில் ஏறி சாதனை படைத்தனர். டிசெம்பர், ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் இம்மலையில் ஏறுவதற்கான காலநிலை நிலவுகின்றது.

## ஆபிரிக்கா கண்டம் - கிளிமஞ்சரோ

இது ஆபிரிக்கா கண்டத்திலேயே மிகவும் உயரமான மலையாகும். இம் மலையின் உயரம் 19,341 அடியாகும். அதாவது 5,895 மீற்றர் உயரமாகும். இது தன்சானியாவில் அமைந்துள்ளது. 1889 ஆம் ஆண்டு முதன்முதலாக கிளிமஞ்சரோ மலையின் உச்சியை அடைந்து சாதனை படைக்கப்பட்டுள்ளது. டிசம்பர், ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஜூன், ஜூலை, ஓகஸ்ட் ஆகிய மாதங்கள் மலை ஏறுவதற்கு மிகச் சாதகமான காலநிலையைக் கொண்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන් ஆயுபோவன் வணக்கம்

இன்றைய பாடத்தில் யமுனாவுக்கும் மாலினிக்கும் இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

**යමුනා:** **ආයුබෝවන්. මම යමුනා; ඔයා?**
ஆயுபோவன். மம யமுனா; ஒயா?
**யமுனா:** **வணக்கம். நான் யமுனா; நீங்கள்?**

**මාලිනී:** **මම මාලිනී. මම නුවර මහ විද්‍යාලයෙන්.**
மம மாலினி. மம நுவர மஹ வித்யாலயென்.
**மாலினி:** **நான் மாலினி. நான் கண்டி மகா வித்தியாலயத்திலிருந்து.**

**යමුනා:** **මම කුරුණෑගල මහ විද්‍යාලයෙන්. දෙමළ භාෂා දින තරඟයට ආවේ.**
மம குருநேகல மஹ வித்யாலயென். தெமள பாஷா தின தரங்கயட்ட ஆவே.
**யமுனா:** **நான் குருநாகல் மகா வித்தியாலயத்தில் இருந்து. தமிழ் மொழித் தின போட்டிக்கு வந்தேன்.**

**මාලිනී:** **ඇත්තද? මමත් තරඟයට තමා ආවේ.**
எத்தத? மமத் தரங்கயட்ட தமா ஆவே.
**மாலினி:** **அப்படியா? நானும் போட்டிக்குத்தான் வந்தேன்.**

**ඔයා කීවෙනි පන්තියේද ඉගෙන ගන්නේ?**
ஒயா கீவெனி பந்தியேத இகென கன்னே?
**நீங்கள் எத்தனையாம் வகுப்பில் படிக்கிறீர்கள்?**

**යමුනා:** **මම නවය වසරේ. ඔයා?**
மம நவய வசரே. ஒயா?
**யமுனா:** **நான் ஒன்பதாம் ஆண்டில். நீங்கள்?**

**මාලිනී:** **මම දහය වසරේ.**
மம தஹய வசரே.
**மாலினி:** **நான் பத்தாம் ஆண்டில்.**

**යමුනා:** **ඔයා තරඟ කරන්නේ මොනවාට ද?**
ஒயா தரங்க கறன்னே மொனவாட்ட த?
**யமுனா:** **நீங்கள் எதில் போட்டியிடுகிறீர்கள்?**

**මාලිනී:** **මම රචනා තරඟයට ඉන්නේ.**
மம ரச்சனா தரங்கயட்ட இன்னே.
**மாலினி:** **நான் கட்டுரைப் போட்டிக்கு இருக்கிறேன்.**

**යමුනා:** **මම ගායනා තරඟයට ඉන්නේ.**
மம காயனா தரங்கயட்ட இன்னே.
**யமுனர:** **நான் பாட்டுப் போட்டிக்கு இருக்கிறேன்.**

**මාලිනී:** **ඔයාව හඳුනා ගන්න ලැබුනට සන්තෝෂයි.**
ஒயாவ ஹந்துனா கன்ன லெபுனட்ட சந்தோஷய்.
**மாலினி:** **உங்களை அறிமுகமானதில் மகிழ்ச்சி.**

**යමුනා** **මටත්. එන්න අපි යමු.**
மட்டத். என்ன அப்பி யமு.
**யமுனா:** **எனக்கும். வாருங்கள் நாம் போவோம்.**

**මාලිනී:** **හොඳයි, යමු.**
ஹொந்தய், யமு.
**மாலினி:** **நல்லது, போவோம்.**

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க**

i. எத்தனையாம் வகுப்பில் படிக்கிறீர்கள்?
..................................................................
ii. கட்டுரைப் போட்டிக்கு இருக்கிறேன்.
..................................................................
iii. வாருங்கள் நாம் போவோம்.
..................................................................






## Gerund - (Verbal Noun)
### தொழிற்பெயர் (வினையால் அணையும் பெயர்)

* வினைச்சொல்லாகவும் (Verb) அதே வினைச்சொல்லை அடியொற்றிய பெயர்ச்சொல்லாகவும் (Noun) திகழுகின்ற ஒரு சொல், 'வினையால் அணையும் பெயர்' (Verbal Noun) என நாமம் பெறுகின்றது என்பதை முன்னைய பாடத்தில் கற்றோம் அல்லவா? மேலும், இவ்வாறான ஒரு சொல்லை நாம் வாக்கியங்களில் பயன்படுத்துவது எவ்வாறு என்பதை கடந்த பாடத்தில் நாம் இரண்டு தனித்தனி உதாரணங்கள் மூலம் பயின்றோம்.

* அதாவது, பயனிலைப் பகுதியில் இச்சொல்லைப் பயன்படுத்தி ஒரு வாக்கியமும் எழுவாய் பகுதியில் பயன்படுத்தி வேறொரு வாக்கியமும் அமைத்து, அதன் செயல்பாடுகளை அவதானித்தோம். இனி, 3 ஆவது உதாரணத்தை இங்கே பயில்வோம்.

**உதாரணம்: 3**

My brother likes reading.
எனது சகோதரன் வாசிப்பை விரும்புகின்றான்.

* மேற்படி வாக்கியத்தில் 'reading' எனும் சொல், செயற்படுபொருள் பகுதியில் இடம்பெற்று, மீண்டும் பெயர்ச்சொல்லாகப் பாவனையாகியுள்ளது.

* ஒரு வாக்கியத்தின் செயற்படுபொருள் பகுதியில் இடம்பெறுகின்ற ஒரு சொல் அல்லது ஒரு சொற்றொடர் எப்பொழுதுமே ஒரு பெயர்ச்சொல்லாகவோ/பெயர்ச்சொல் சார்ந்த சொற்றொடராகவோதான் விளங்குகின்றது என்பதுவும் நாம் சாதாரணமாக அறிந்துள்ள விடயமே.

* இதன்படி, இந்த வாக்கியத்தில் செயற்படுபொருள் பகுதியில் இடம்பெற்றுள்ள 'reading' எனும் சொல், மீண்டும் பெயர்ச்சொல்லாகத் திகழ்கின்றது என்பது கண்கூடு.

* எனினும், இச்சொல்லானது, வினைச்சொல்லை அடியொற்றி வருகின்ற பெயர்ச்சொல் என்பதால், இது 'வினையால் அணையும் பெயர்' என்றோ 'தொழிற்பெயர்' என்றோதான் இலக்கண ரீதியாக கூறப்பட வேண்டும்.

* இதன் சுருக்கமான கண்ணோட்டம் வருமாறு;
reading- Noun - (Verbal Noun) - Gerund
வாசித்தல்- பெயர்ச்சொல்-(வினையால் அணையும் பெயர்)-தொழிற்பெயர்

* தொழிற்பெயர் தழுவிய சொற்றொடர்களைக் கையாண்டு அமைக்கப்பட்ட வாக்கியங்களை இங்கே அவதானிப்போம்.

* reading story books.
கதைப்புத்தகங்கள் வாசித்தல்.

அ) My brother likes reading story books.
எனது சகோதரன் கதைப்புத்தகங்கள் வாசிப்பதை விரும்புகிறான்.

ஆ) Reading story books is my hobby.
கதைப்புத்தகங்கள் வாசித்தல் எனது பொழுதுபோக்கு ஆகும்.

* collecting stamps.
முத்திரைகள் சேகரித்தல்.

இ) Sujatha likes collecting stamps.
சுஜாதா முத்திரைகள் சேகரிப்பதை விரும்புகிறாள்.

ஈ) Collecitng stamps is her hobby.
முத்திரைகள் சேகரித்தல் அவளது பொழுதுபோக்கு ஆகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நீங்களும் மெஜிக் செய்யலாம்

## ஊசியினால் குத்தினாலும் பாதிப்பற்ற 'மெஜிக் விரல்'

இன்று சற்றுப் பயங்கரமான மெஜிக்கை செய்யப்போகிறோம். 'ஊசியினால் விரலைக் குத்தினாலும் எவ்வித பாதிப்பும் ஏற்படாது'

### தேவையான பொருட்கள்:

* உங்களது பெருவிரல் அளவுடைய கெரட் ஒன்று
* சட்டை ஊசிகள் சில...
* இரு டிஷு கடதாசிகள்




### முன் ஏற்பாடு:

மேசையில் இருந்தே இந்த மாயாஜாலத்தை செய்ய வேண்டும். இல்லாவிடின், மாயாஜாலம் வெற்றிகரமாக அமையாது. கெரட்டை மேசை மீது வைத்துக்கொள்ள வேண்டும். அதனை டிஷு கடதாசியால் மூடிவிடுங்கள்.

### 1 ஆவது படிமுறை:

ஒன்றன் மீது ஒன்று வைத்து ஏற்பாடு செய்யப்பட்ட டிஷு கடதாசிகள் இரண்டையும் மேசை மீது வைத்து, உங்களது கைகளால் பிடித்துக்கொண்டு டிஷு கடதாசியை காட்டுங்கள்.



### 2 ஆவது படிமுறை:



இப்பொழுது உங்களது இடது கையை அல்லது வலது கையை உங்களுக்குப் பழக்கமான கை டிஷு கடதாசியால் மூடிக்கொண்டு காட்டுங்கள்.

### 3 ஆவது படிமுறை:

அதன் பின் மெதுவாக பெருவிரலை மடித்து விட்டு அதற்குப் பதிலாக கெரட் துண்டினை வைத்துக் கொள்ளுங்கள். (கெரட் சம்பந்தப்பட்ட விடயங்களை டிஷு பேப்பரால் மூடிக்கொண்டு செய்ய வேண்டும். பார்வையாளர்களுக்கு அது தெரியக்கூடாது. படத்தில் உங்களை அறிவுறுத்துவதற்காக டிஷு பேப்பர் அகற்றப்பட்டுள்ளது')



### 4 ஆவது படிமுறை:



இப்பொழுது ஒவ்வொரு ஊசியாக எடுத்து, பெருவிரலில் குத்துங்கள். இதனைப் பார்த்து பார்வையாளர்கள் திகைப்படைவர். ஏனெனில், டிஷு கடதாசியினுள் உங்கள் விரல் இருப்பதாகவே அவர்கள் கருதுவர்.

### 5 ஆவது படிமுறை:



பின்னர் ஊசிகளை ஒவ்வொன்றாக அப்புறப்படுத்துங்கள். அதன்பின் கெரட்டினை மேசை மீது வைத்து யாருக்கும் தெரியாத வாறு கீழே தள்ளிவிடுங்கள்.

### இறுதியாக:



தற்போது துளை விழுந்த டிஷு பேப்பரை அகற்றிவிட்டு பெருவிரலைக் காட்டுங்கள்.

**மிகவும் முக்கியம்:**

உங்களது விரலைப் பாதுகாத்துக் கொள்வது அவசியம். நீங்கள் ஊசியினால் விரலை அன்றி கெரட்டையே குத்துகின்றீர்கள். ஊசி குத்தினால் வேதனை ஏற்படும். அதனால், இதனை ஒரு கண்கட்டி வித்தை என்பதனை புரிந்துகொள்க. திகைப்படைய பார்வையாளர்களுக்கு இடமளித்துவிட்டு பின்பு கெரட்டை காட்டுங்கள். அப்பொழுது மாயாஜாலத்தின் உண்மை புரியும். இல்லாவிடின், இதனைப் பின்பற்றி ஆபத்துக்களை சந்திக்க நேரிடும்.

# தெரிந்து கொள்வோம்

* கண்டி மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்திற்குத் தெரிவான முதலாவது முஸ்லிம் உறுப்பினர் யார்?

  C.A.S. மரிக்கார்



* 'பருதி வட்டம் வீசுபவன்' எனும் உலகப் புகழ்பெற்ற சிலையை நிர்மாணித்த சிற்பி யார்?

  'மைரான்' (Myron) எனும் கலைஞன்

* முதன்முதலில் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த இலங்கையர் யார்?

  நவரத்தினசாமி

* இந்தியாவின் மிக உயர்ந்த விருதான 'பாரத ரத்னா' விருதைப் பெற்ற பாடகிகள் யார்?

  i. லதா மங்கேஷ்கர்
  ii. இசையரசி எம்.எஸ்.சுப்புலக்ஷ்மி



* கெனடா சமஷ்டியிலிருந்து பிரிந்து செல்லப் போராட்டம் நடத்தும் மாநிலம் எது?

  கியுபெக் மாநிலம்

* அதிகளவான மக்கள் நடமாடும் இடங்களில் பல்வேறு கருத்துக்களை வெளிப்படுத்தும் சிற்பங்கள் சிலைகளாக வடிக்கப்பட்டு வைக்கப்படும் முறையை அறிமுகப்படுத்திய சிற்பி யார்?

  பிரித்தானியாவைச் சேர்ந்த சிற்பி ஹென்றி ஸ்பென்சர் மூர்

* கால்பந்தாட்டத்தில் தங்கக் கையுறை எந்த விளையாட்டு வீரருக்கு வழங்கப்படுகின்றது?

  அதிகளவான திறமைகளைக் காட்டிய கோல் கீப்பருக்கு (காப்பாளருக்கு)



* ஐஸ்லாந்தின் தலைநகரம் எது?

  ரெய்க்ஜவிக்



* 2013 ஆம் ஆண்டில் 'நொபெல்' சமாதானப் பரிசு யாருக்கு வழங்கப்பட்டது?

  ஐ.நா.வின் ரசாயன ஆயுதங்களை தடை செய்யும் அமைப்புக்கு வழங்கப்பட்டது

* இலங்கையின் கல்வி அமைச்சர் யார்?

  பந்துல குணவர்தன



தொகுப்பு: உடுவை பரந்தாமன்

# விஜய் மாணவர் கழகம்


அங். இல: 5794
எம்.ஷஹ்ரான், டேவிட்சன் வீதி, பம்பலப்பிட்டி.


அங். இல: 5795
எம்.என்.இப்லால், ஜயா வீதி, கிண்ணியா-03.


அங். இல: 5796
என்.எம்.அம்ஜத், அட்டுளுகம, பண்டாரகம.


அங். இல: 5797
ஷம்ஹான் ஜிப்ரீல், ஒயாபாஹல, மாத்தளை.


அங். இல: 5798
எஸ்.நஸாத் அஹமட், புப்போகம, கெக்கிராவ.


அங். இல:5799
ச.சனுஷன், டயகம மேற்குப் பிரிவு, டயகம.


அங். இல: 5800
செ.நிலுக்ஷி, ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.


அங். இல: 5801
யோ.மதுஷனன், பாண்டிருப்பு - 2C, கல்முனை.


அங். இல: 5802
ஜே.ஜெய்ஸ் அஹமட், ஜாயா வீதி, மருதமுனை-05.


அங். இல: 5803
வெலண்டினி மேலினா, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு-13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரியரின் புகழ்

ஆதரவு தருவார் கல்வியிலே
ஆண்டவனை வெல்வார் நேர் பொருளிலே
ஆதரவு படைத்த எம்மை
ஆளாக்குபவர்கள் ஆசிரியர்களே!

இவரை ஓடமாகப் பயன்படுத்தினால்
கடந்திடலாம் கல்வி ஆற்றை
இவரை ஏணியாகப் பயன்படுத்தினால்
அடைந்து விடலாம் கல்வியின் உச்சியை!

குரு என்னும் பெயரால்-இவர் தருவது
குருடு நீக்கக் கல்விக் கண்
ஆசான் எனும் பெயரால் - இவர் தருவது
அறியாமையை நீக்கக் கல்வி அறிவு!

புகழ்ந்திடுவோம் இவர் பெயரை
பூவுலகெங்கும்
பரப்பிடுவோம் இவர் புகழை
பார் உலகெங்கும்!

எஸ்.கிருஷாயினி,
உதயபுரம் த.ம.வித்., பெரியகல்லாறு, மட்டக்களப்பு.



# தீயவர்களுக்கு உதவி செய்தால்...

அது ஒரு கடும் குளிர்காலம். ஒருநாள் பாம்பு ஒன்று பனியில் விறைத்து உயிர்போய்விடுமோ என்ற நிலையில் சுருண்டு கிடந்தது. அந்த நேரத்தில் அவ்வழியே வந்த விவசாயி ஒருவன் அந்த பாம்பினைப் பார்த்தான். இரக்க குணமுள்ள அந்த விவசாயி அப்பாம்புக்கு உதவிட நினைத்தான்.

பாம்பினை எடுத்து தன் மார்போடு அணைத்து அதனைச் சூடுபடுத்தினான். விவசாயியின் உடல் சூடு பட்டதும், பாம்பு மெல்ல மெல்ல உணர்வு பெற்றது. அதற்கு நன்றாக உணர்வு வந்ததும், அது தன்னைக் காப்பாற்றிய விவசாயியை பலமாகக் கடித்துவிட்டது. பாம்பின் நஞ்சு ஏறி உயிர்போகும் நிலையில் இருந்த அந்த விவசாயி தன் செய்கைக்காக வருந்தினான்.

பாம்பைப் பார்த்து 'ஏ நன்றி கெட்ட பாம்பே! உன்னைக் காப்பாற்றிய என்னையே கடித்துவிட்டாயே! உன் குணம் தெரிந்தும் நான் உனக்கு உதவி செய்தேன் அல்லவா? அதற்கு இது சரியான தண்டனை தான்' என்று கூறிவிட்டு விவசாயி இறந்து போனான்.

**தீயவர்களுக்கு செய்யும் உதவி தீமையாகவே முடியும்.**




# அறிந்து கொள்ளுங்கள்

- சூரிய படலத்தை அதிகளவில் பயன்படுத்தும் நாடு - **இந்தியா**
- முதலாவது தெறிப்புத் தொலைக்காட்டியைக் கண்டுபிடித்தவர் - **சேர்.ஐசக் நியூட்டன்**
- முதன்முதலில் செயற்கைச் சந்திரனை விண்ணிற்கு அனுப்பிய நாடு - **ரஷ்யா**
- உலகின் மிகப்பெரிய தனியிலையைக் கொண்ட தாவரம் - **ராட்சத நீர் அல்லி**
- கடதாசிகளை மடித்து பலவண்ண உருவங்களைச் செய்துகொள்ளும் ஆக்கம்- **'ஒரிகாமி'**

ஜெ.கருஷ்ணா,
கமு/கார்மேல் பற்றிமா தே.பாட.,
கல்முனை.



# புத்தகத்தை எவ்வாறு பாதுகாக்கலாம்?

★ புத்தகத்தை அதிகமாகப் பிரிக்கக்கூடாது.
★ பிரித்தபடியே கவிழ்த்து வைக்காதீர்கள்.
★ மூலைகளை மடிக்கக்கூடாது.
★ தலையணைக்கு கீழ் வைக்கக்கூடாது.
★ குழந்தைகளிடம் கொடுக்காதீர்கள்.
★ குறிப்புகளும், கோடுகளும் எழுதவேண்டாம்.
★ எண்ணெய், நீர் பட்ட கைகளுடன் புத்தகத்தைத் தொடக்கூடாது.

ரிப்கான் மிஹ்லார்,
நிக/பண்ணவ மு.ம.வித்தியாலயம்.

# பாலைவனக் கப்பல்

'பாலைவனக் கப்பல்' என்னும் பட்டத்தைப் பெற்றுள்ள ஒட்டகம் ஏனைய விலங்குகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. இவை திடமான உணவுகளை உட்கொண்டு பல



நாட்கள் பசியையும் தாகத்தையும் தாங்கிக்கொள்ளக்கூடிய ஆற்றலுடையவை. 225 கிலோ வரையிலான சுமையைத் தாங்கிக்கொண்டு நாளொன்றுக்கு 40 கிலோ மீற்றர் வரை நடந்து செல்லும் வலிமை பெற்றவை. பயணத்தின்போதும் ஓய்வெடுக்கும்போதும் அவை பல குரல்களை வெளிப்படுத்தக்கூடியவை. கோபம் ஏற்பட்டால் மனிதனையே கொன்றுவிடக்கூடும்.

ஒட்டகமோட்டிகள் அதனுடன் அன்பாகப் பழகுவர். வீண் தொல்லைகள் கொடுத்தால் அது தரையில் படுத்துக்கொள்ளும். அதன் முதுகில் திமில் இருக்கும். சில ஒட்டகங்களுக்கு இரண்டு திமில்கள் இருக்கும். திமிலிலுள்ள கொழுப்பு உடலின் பத்தில் ஒரு பகுதியாக இருக்கும். உணவு கிடைக்காதபோது, ஒட்டகம் திமிலிலுள்ள கொழுப்பைப் பயன்படுத்திக் கொள்ளும். ஓய்வாக இருக்கும் ஒட்டகத்துக்கு நீர் அவ்வளவு தேவையில்லை. அதனால், பத்துமாதம் வரை நீரின்றி உயிர்வாழ முடியும். பசியோ, தாகமோ ஏற்படும்போது உணவு, நீர் இருக்கும் இடத்தை நாடிச் செல்லும். அரபு நாடுகளில் ஒட்டகப் பந்தயம் ஒரு பொழுதுபோக்கு அம்சமாகவும் உள்ளது.

எம்.ஐ.எப்.றாஷிதா,
கிரி/சுலைமானியா மு.வித்., குரீகொடுவ, பஹமுன.

# விஞ்ஞான விளக்கங்கள்

1. மெழுகுவர்த்தி சுவாலையை எத்திசையில் பிடித்தாலும், அதன் சுவாலை மேல் நோக்கியே எரிகின்றது...!

**திண்ம மெழுகின் ஆவியானது, அடர்த்தி வேறுபாடு காரணமாக, மேல் நோக்கியே எழும். இதனால், எத்திசையில் பிடிக்கப்பட்டாலும் மேல் நோக்கியே சுவாலை எரியும்.**

2. எயிட்ஸ் (Aids) நோயாளிகள் தடிமன் காரணமாகவும் இறக்கலாம்....!


**தொற்று நோய்களிலிருந்து தம்மைக் காத்துக்கொள்வதற்கு நிர்ப்பீடனத் தொகுதி உதவுகின்றது. எயிட்ஸ், வைரஸ்கள் உடலின் நிர்ப்பீடனத் தொகுதியை செயலிழக்கச் செய்கின்றன. இதனால், தடிமன் அல்லது வேறெதுவும் தொற்றினாலோ எயிட்ஸ் நோயாளிகள் இறக்கலாம்.**

கே.ராஸியா ரிஸான், அல்-அக்ஸா மு.ம.வித்., ஹஹலியகொட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுத்து வர வேண்டியது எது?

2






'நடராஜ் அறிவுக்கு விருந்து' பகுதியிலுள்ள 1, 2, 3 ஆகிய போட்டிகளுக்கான விடைகளை தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி, 03.09.2014 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள்.

நடராஜ் அறிவுக்கு விருந்து - 39
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

**பரிசுப் பொதி**
1ஆம் பரிசு ரூ. 700/=
2ஆம் பரிசு ரூ. 500/=
3ஆம் பரிசு ரூ. 300/=



நடராஜ் அறிவுக்கு விருந்து போட்டிகளுக்கான விடைகளை அனுப்பும்போது, உங்கள் பெயர், வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம், பாடசாலை, நகரம் என்பனவற்றை கட்டாயம் எழுதி அனுப்புங்கள்.

## அருகிலுள்ள ஆங்கிலச் சொற்களை எழுத்துக்கூட்டத்திற்குள் இனங்கண்டு, நிறந்தீட்டுக


1

moon
boat
crab
deer
cloud
chair



| | | | | | |
|---|---|---|---|---|---|
| j | o | w | t | r | a |
| m | c | d | q | c | r |
| o | r | e | b | l | i |
| o | a | e | o | o | a |
| n | b | r | a | u | h |
| s | v | o | t | d | c |

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 100



### மேலிருந்து கீழ்

01. புதுமை.
02. ஆணி அடிக்க உதவும் சாதனம்.
03. பனை, தென்னை என்பனவற்றின் இலை.
04. பசு.
06. 'அசல்' என்பதன் எதிர்ப்பதம்.
09. அரசன். (தலைகீழ்)

### இடமிருந்து வலம்


01. ஆறு ருசிகளையும் இவ்வாறு அழைப்பதுண்டு.
04. 'தொழிற்சாலை' என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
05. நிலவு.
07. கரும்பு. (மாறியுள்ளது)
08. அசுத்தமான இடத்தில் மொய்க்கும்.
09. தடி.

### குறுக்கெழுத்துப் போட்டி இல. 99 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ப | ச் | 2 ச | ரி | 3 சீ | |
| | | ட் | | ல | 4 ப |
| 5 ஒ | ட் | ட | க | ம் | |
| ட் | | ம் | | 6 பு | 7 கை |
| ட | | | வை | | ம் |
| டை | 8 ஆ | | 9 அ | ம் | மை |

## உருக்களின் எண்ணிக்கையில் வட்டமிடுக

3




## நடராஜ் அறிவுக்கு விருந்து - 37 விடைகள்

போட்டி: 01



போட்டி: 02

f i s h
p i e
r e d
p a i n t
b o o k
i c e
r u n



போட்டி: 03



## நடராஜ் அறிவுக்கு விருந்து - 37 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்

1ஆம் பரிசு
கி.இவான் ஷலி, திருகோணமலை.

2ஆம் பரிசு
எம்.ரைஹான், அம்பகஹலந்த.

3ஆம் பரிசு
தே.சங்கரிபிரியா, நீர்கொழும்பு.

பாராட்டுப் பெறுவோர்:

- கு.அகிலேஷன், அரியாலை.
- எஃப்.ஜமீலா, கிரிகல்ல.
- ஜெ.பிரியதர்சினி, மகா இறம்பைக்குளம்.
- எஸ்.ஜஸ்மிதா, மட்டக்களப்பு.
- ஹமீமா அப்துல்லாஹ், மல்வானை.
- கு.வினோத்கரன், கொழும்பு-13.
- பர்வின் பாஹிம், பிஹில்லதெனிய.
- அ.கதிலன், தெல்லிப்பளை.
- நாதில் அஹமட், புத்தளம்.
- ஜீ.கீர்த்திகா, நாயபெத்த.

Sponsored by

NATARAJ

Packsco Ceylon (Pvt) Ltd, P.O Box-165, Colombo-03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோ.டிலக்ஸன்,
யா/டிறிபேக் கல்., சாவகச்சேரி.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



சஹீன்,
அஸ்-ஸிராஜ் ம.வித்.,
அக்கரைப்பற்று.




முஹம்மது இப்லால்,
அறபா தேசிய பாட., வெலிகாமம்.



செ.நியத்தரி,
சைவப்பிரகாசா ஆ.பாட., வவுனியா.



யே.சவிக்ஷனி,
பாரதி கனிஸ்ட வித்., பதுளை.



எஃப்.சஹ்லா,
தெலம்புகல்ல மு.ம.வித்.,
தெலம்புகல்ல.



எஃப்.நிஸ்மா,
செண்டிஸ் வீதி, திக்குவல்லை.

# துல்லியமாக வேட்டையாடும் காட்டு நாய்கள்

ஆபிரிக்கக் காடுகளில் காட்டு நாய்கள் (Wild dog) எனும் ஒரு வகை வேட்டை நாய்கள் வாழ்கின்றன. இவை மிகவும் புத்திசாலித்தனமான, பயங்கரமான மிருகங்கள். இரவில் முப்பது அல்லது நாற்பது நாய்கள் அடங்கிய கூட்டமாக வேட்டைக்குக் கிளம்பும். தமக்குரிய இரை எதுவென முடிவுகட்டிவிட்டே இவ்வாறு வேட்டையாடச் செல்கின்றன.

மானே இன்றைய இரை என இவை முடிவுகட்டிவிட்டால் வழியில் வேறு எந்த மிருகங்கள் வந்தாலும் அவற்றை ஒன்றும் செய்வதில்லை. கண்டுகொள்ளாமல் விலகியே சென்றுவிடுகின்றன. தாம் தீர்மானித்தபடி மான்கள் தென்பட்டவுடன் இக்காட்டு நாய்களின் கண்கள் பளபளக்கும். ஒருவித வெறித்தன்மையுடன் வேட்டைக்குத் தயாராகிவிடும். எனினும், தமது சக்தியை வேட்டைக்காக அதிகளவு விரயம் செய்ய இவை விரும்புவதில்லை. இதனால், மான் கூட்டங்களில் பலவீனமான ஒரு மானை தேர்ந்தெடுத்து அதை துரத்த ஆரம்பிக்கும்.

தனது உயிரைக் காத்துக்கொள்ள மான் ஓடினாலும், இந்த வன்முறைக் கும்பல்கள் விடுவதில்லை.





இக்காட்டு நாய்களால் மூச்சிரைக்காமல் சுமார் 60 கி.மீற்றர் வேகத்தில் தொடர்ந்து ஓட முடியும். மெல்ல மெல்ல மானை நெருங்கி, வியூகம் வகுத்து, இரை கொஞ்சம் சோர்வடைய திடீரென இந்த நாய்கள் மானின் கண்களைக் குறிவைத்துப் பாயும்.

ஒன்று மூக்கு, ஒன்று இதயம், ஒன்று வயிறு என மானின் உயிர் நிலைகளை ஒவ்வொன்றாகத் தாக்கும். தாக்கப்படும் மான் சின்னாபின்னமாகி விடும். சுமார் 10-15 நிமிடங்களில் அங்கு மிஞ்சுவது ஒருசில எலும்புகளும் மண்டை ஓடும்தான். இத்தகைய பயங்கரமான காட்டு நாய்களைப் பார்த்தால்



சிங்கம்கூட அஞ்சித் தன் வழியே ஒதுங்கிச் சென்றுவிடும்.

# 'சிசேம் ஸ்ட்ரீட்' எனும் சிறுவர்களுக்கான பொம்மைக் கார்ட்டூன்

உலகில் தொடர்ச்சியாக ஒளிப்ரப்பான சிறுவர் பொம்மைக் கார்ட்டூனாக 'சிசேம் ஸ்ட்ரீட்' எனும் ஆங்கில மபெட் (Muppet) தொடர் திகழ்கின்றது. இத்தொடர் அமெரிக்காவில் தனது 40 ஆவது வருடத்தை பூர்த்திசெய்து, தொடர்ந்தும் ஒளிபரப்பாகின்றது.



எழுதுதல், வாசித்தல், இலக்கணங்களைப் புரிந்துகொள்ளல் போன்ற அறிவினை சிறுவர்கள் பெற்றுக்கொள்ள இத்தொடர் உதவி புரிகின்றது. ஜிம்ஹென்கன் என்பவரே இதற்கு சிறந்த நேர்த்தியான பொம்மை அமைப்பினை உருவாக்குவதற்கு உதவியுள்ளார். இதனால், இத் தொடர் உலகம் முழுவதும் பிரபல்யம் பெற்றுள்ளது. 2-6 வயதுக்கு இடைப்பட்டோருக்கான இந்நிகழ்ச்சி 140 நாடுகளில் ஒளிபரப்பு செய்யப்படுகின்றது. இது 122 விருதுகளையும் பெற்றுள்ளது.



## தமிழ்

புலமைப் பரிசில் மாதிரிவினாத்தாள்

(ஓகஸ்ட் 20 இல் பிரசுரமாகியவைக்கான விடைகள்)

01) 1. ஒருவர் செய்த உதவியை 2. பூமி, வையகம், பார்
3. உப்பிட்டவரை உள்ளளவும் நினை 4. பெரிது 5. ஞாலத்தை/பூமியை

02) 1. பொங்கல் 2. வானம் 3. பிதா 4. பூஞ்சோலை 5. நதி

03) 1. அதிகாலையில் 2. பொன் 3. குட்டி 4. கோழி 5. ஓலை

04) ஐந்து சொற்களுக்கு குறையாது தெளிவான வாக்கியம் அமைத்தல் வேண்டும்.

05) 1. போர்+களம் 2. நுண்+அங்கி 3. பொன்+கரம்
4. நல்ல+அறிவு 5. நூறு+ஆண்டு

06) 1. கமலாவும் கீதாவும் நடனம் ஆடினார்கள்.
2. சிறுவர்கள் ஓடியாடி விளையாடினார்கள்.
3. நாம் புலமைப்பரிசில் பரீட்சைக்கு ஆயத்தம் செய்தோம்.

07) 1. அழி 2. வலி 3. உழவு 4. விழா 5. களை

08) 1. அந்த ஓணான் பல நிறம் கொள்ளும்.
2. அகில இலங்கை தமிழ் மொழித்தினம் விபுலானந்தர் பிறந்தநாளில் கொண்டாடப்படும்.
3. பௌர்ணமி தினத்தில் இருந்து சந்திரன் தேய்ந்து செல்லும்.

09) 1. மாடேறி மிதித்தது போல 2. கோணல் என்றது போல
3. ஆசைப்பட்டது போல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டுபிடிப்புக்கள்




ரால்ஃப் டீடர்
(Ralph Teetor)
1948 - அமெரிக்கா
சீர்வேகக்கருவி




ஏர்ல் சிலாஸ் டியுபர்
(Earl Silas Tupper)
1948 - கொஸ்டா ரிகா
Tupperware




நிகோலா டெஸ்லா
(Nikola Tesla)
1989 - அமெரிக்கா
தொலையியக்கி (Remote Control)

ஆர்த்தர் சிகார்ட்
(Arthur Sicard)
1925 - அமெரிக்கா




பனி நீக்கும் ஊர்தி





ஹென்றி டீ.பெர்கி
(Henry D.Perky)
1893 - அமெரிக்க
கோதுமைத் துருவல்



ரே ரொக்
(Ray Kroc)
1954 - அமெரிக்கா
Mc Donald's

McDonald's

# நாடுகளும் பணத்தாள்களும்




கெம்பியா
கெம்பியன் டலசி
(BMD)




ஜோர்ஜியா
ஜோர்ஜியன் லெரி
(GEL)




ஜேர்மனி
யூரோ
(EUR)




கானா
கானா செடி
(GHS)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் சமாதான தூதுவர் நிகழ்ச்சித் திட்டம்

## (Messengers of Peace - MoP)

"சாரணர்களே, இந்த உலகத்தினை மாற்றி, நாளைய சமாதானமான உலகமாக பெற்றுக் கொடுப்பார்கள்" என்ற சிந்தனை ஸ்வீடன் நாட்டின் மன்னர் Carl XVI Gustaf இற்கு தோன்றியதற்கு ஏற்ப 2011 இல் இருந்து அமைதி, கல்வி மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் என்ற அடிப்படையில் உலக சாரணர் அமைப்பு World Organization of the scout Movement எனும் நிறுவனத்தை முன்னெடுத்து வருகின்றது. இதன் சிறப்பு தினம் ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் 21 ஆம் திகதி உலகம் முழுவதும் அனுஷ்டிக்கப்படுகின்றது.

தனி நபர்கள் மற்றும் இணைய சமூகங்கள் மூலம் உரிய



திரு.டேமியன் சில்வா, உதவிப் பிரதம ஆணையாளர், MoP தேசிய ஒருங்கிணைப்பாளர்.


மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் சர்வதேச ஒருங்கிணைப்பாளர்கள்

விபரங்களைச் சேகரிக்கவும் மற்றும் சமூக சேவைகள், அவற்றின் உள்ளூர் சமூகங்கள் அமைதியாக கட்டியெழுப்ப ஒருவருக்கொருவர் ஊக்குவிக்கும் செயற்பாடாக அமையச் செய்வதே இதன் நோக்கமாகும். இவையனைத்தும் உலகில்



நிகழ்ச்சி திட்டம் தொடர்பான சின்னங்கள்

அனைத்து மூலைகளிலும் உள்ள 20 மில்லியனுக்கும் அதிகமான சாரணர்களுக்குச் சென்றடைவதன் மூலம் மற்றவர்களை உரிய வகையில் ஊக்குவிக்க முடியும் எனவும் MoP நிறுவனம் கருதுகின்றது. உலக சாரணர் அமைப்பின் மூலம் இந்த முயற்சிகள் அனைத்தும் சமாதானத்தை மட்டுமே நோக்காகக் கொண்டு ள்ளதுடன், அதற்கமைவாக 'போர் இல்லாத கண்ணோட்டத்தில் உலகத்தினை மாற்றியமைக்க' வேண்டிய தேவை இருப்பதையும் இதற்கான இணைப் பாளர்களை உங்களிடம் தெரிவுசெய்வதுடன், முகநூல் போன்ற சமூகத் தொடர்பு வலைப் பின்னல்களின்மூலம் இதனை நீங்கள் பகிர வேண்டியதன் அவசியத்தையும் MoP நிறுவனம் சுட்டிக்காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## விஜய் சாரணர் உலகம்

### சாரணர் இயக்க உலக அமைப்பு WOSM (World Organization of the Scout Movement)

01 ஒகஸ்ட் 1907 இல் இங்கிலாந்தில் Brownsea தீவில் பேடன் பவல் அவர்களால் முதலாவது பரிசோதனை முகாம் நிறுவப்பட்டது. இவ்வமைப்பில் உறுப்பினராகச் சேர்ந்த நாடுகளும் அங்கத்தவர்களது விபரங்களும்.

| நாடு | சாரண உறுப்பினர்கள் | WOSM இல் சேர்ந்த ஆண்டு | நிறுவப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| எகிப்து | 82,940 | 1922 | 1914 |

தொகுப்பு: ஜனாதிபதி சாரணன் **யோ.கேதீசன்**
SLTS BP.A.WB(SL). IAP (India)

### நீங்கள் பாசறைகளில் இவ்வாறு உறங்கி இருக்கிறீர்களா?



உங்களது படுக்கை போர்வையினை எடுத்துக்கொண்டு பாசறையில் அமைக்கக்கூடிய இந்த முறையினைப் போன்று நீங்கள் அமைத்துக் கொள்ளுங்கள். தடிகள் மற்றும் கட்டுக்களை கவனமாகக் கட்டியிருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளல் முக்கியமானதாகும்.

# ஜப்பான் செல்லும் சாரணன் யதுகணேஷ்

இலங்கை சாரணர் சங்கத்தினால் வழங்கப்படும் புலமைப்பரிசிலைப் பெற்று ஜப்பானில் நடைபெறும் 'Inspire Japan - 2014' என்னும் நிகழ்விற்கு வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய சாரணர் துருப்பைச் சேர்ந்த சாரணன் கணேசலிங்கம் யதுகணேஷ் கலந்துகொண்டார். தேசிய கொடி பெற்றுக்கொள்ளலும், இவர்களை வழியனுப்பும் நிகழ்வும், கொழும்பு மாவட்ட சாரணர் சங்க தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது. ஜூலை 29 தொடக்கம் ஒகஸ்ட் 10 ஆம் திகதி வரை நடைபெற்ற இந்த நிகழ்விற்கு இலங்கையில் இருந்து மூவர் கொண்ட குழு பங்குகொண்டது.






ஜூலை 30 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி விருது வழங்கும் விழாவில் மருதமுனை, அல்-மனார் மத்திய கல்லூரி மாணவன் ஏ.ஜே.அர்ஸாத் ஆத்தீஸிற்கு சாரணியத்திற்கான ஜனாதிபதி விருது வழங்கப்பட்டது. 2012 இல் இலங்கையில் நடைபெற்ற ஆசிய பசுபிக் பிராந்திய சர்வதேச சாரணர் பாசறையில் கலந்துகொண்ட இவர், மருதமுனையைச் சேர்ந்த ஏ.சி.அப்துல் ஜப்பார்-சஹீலா தம்பதியரின் புதல்வர் ஆவார்.

(தகவல்: எம்.எல்.சரீப்டீன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியன்மார்

தென்கிழக்கு ஆசியாவில் அமைந்துள்ள மியன்மார் அல்லது பர்மா பல்லின மக்கள் நிறைந்த நாடாகும். பெகான், டொயுங்கு, கொன்பவூங் ஆகிய அரச வம்ச ஆட்சி நடந்த பர்மா 18 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயருக்கும் 19 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயருக்கும் அடிபணிந்தது. ஆங்கிலேயர் இந்தியாவின் ஒரு பிரிவாகவே பர்மாவை ஆட்சி செய்த பொழுதிலும் 1937 ஆம் ஆண்டே அதனை தனித்துவமானதும் சுதந்திரமானதுமான வேறொரு நாடாக ஏற்றுக்கொண்டது. அதன்பின் 1948 ஜனவரி 04 ஆம் திகதி பர்மாவிற்கு சுதந்திரம் வழங்கப்பட்டது. எனினும், நாட்டில் பெரும் இனரீதியான மோதல்கள் ஏற்பட்டன. இதனால், இராணுவ ஆட்சியும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த வலயத்தில் மிகச் சிறந்த விவசாய நாடாகத் திகழ்ந்த பர்மா, அரசியல் மற்றும் உள்நாட்டுப் பிரச்சினைகளால் இன்று மிகக் குறுகிய காலத்தில் ஏழை நாடாக மாறியுள்ளது. அந்நாட்டில் தற்போதைய அரசியலமைப்பு 2011 முதல் நடைமுறையில் உள்ளது.




மியன்மார் நாட்டின் எதிர்க்கட்சித் தலைவியாகிய ஆங் சாங் சூகி 1991 இல் நோபெல் சமாதானப் பரிசு பெற்ற உலகின் புகழ்பெற்ற ஒரு தலைவராகத் திகழ்கின்றார்.

## தேசிய விலங்கும் மலரும்



வெள்ளை நிற மயில் மற்றும் யானை என்பன மியன்மாரின் தேசிய விலங்குகளாகும். பாதுஅக் எனும் மலர் அந்நாட்டின் தேசிய மலராக கருதப்படுகின்றது.

## இனங்கள்




## மொழி

பர்மிய மொழி பிரதான மொழியாகும்.

## சமயம்

| | |
|---|---|
| பௌத்தம் | 89% |
| கிறிஸ்தவர்கள் | 04% |
| பெப்டிஸ்ட் | 03% |
| உரோமன் கத்தோலிக்கர் | 01% |
| இஸ்லாமியர் | 04% |
| எனிமிஸ்ட் | 01% |
| ஏனையோர் | 02% |

## அரசியல்



மியன்மாரின் நாடாளுமன்றக் கட்டடம்.

ஜனாதிபதி தெயின் செயின்

## மியன்மாரின் இயற்கை வளம்

இயற்கை வாயு, பெற்றோலியம், சிங், டங்ஸ்டன், செம்பு, நிலக்கரி, சுண்ணக்கல், ஈயம்.



பர்மாவில் வாழ்ந்த பூர்வீக சுதேசிகளின் வழித்தோன்றல்களை நாம் இன்றும் அந்நாட்டில் காணலாம்.



பர்மியர்களின் பாரம்பரிய உடை.

பர்மாவின் நாணய அலகு 'க்யாட்' ஆகும்.



மியன்மாரின் சம்பிரதாய நடனத்தின் ஓர் அங்கம்.



கி.பி 849 முதல் அந்நாட்டில் நிலவிய பகான் அரச வம்ச ஆட்சியின்போது நிறுவப்பட்ட 'பெகோடா' கட்டடமும் விகாரைத் தொகுதிகளும்.




1,930 km கரையோரம் கி.மீற்றர்

நிலப்பரப்பு ச.கி.மீற்றர்
653,508 km²

மொத்த சனத்தொகை
55,167,330



மியன்மாரில் அமைந்துள்ள ஒரு தங்கச் சுரங்கம்.



மசகு எண்ணெய் வளமானது, மியன்மார் பொருளாதாரத்தில் அதிக பங்களிப்பைச் செலுத்துகிறது.



நெற் பயிர்ச்செய்கை அந்நாட்டின் விவசாயத்தில் முதலிடத்தை வகிக்கின்றது. காய்கறிகள், தானியம், பழவகைகள் மற்றும் மீன் வளர்ப்பும் மேற்கொள்ளப்படுகின்றது. பொப்பிமலர்ச் செய்கையும் அந்நாட்டில் மேற்கொள்ளப்படுகின்றது.

## தலைநகரமும் பெரிய நகரமும்



மியன்மாரில் அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரைகள் வணக்கஸ்தலங்கள், கலாசார மத்திய நிலையங்கள் என்பன பெருமளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்துள்ளது.

வருடாந்தம் நடைபெறும் 'பெகோடா விழா' பெரும் புகழ்பெற்றது.

பௌத்த நாடாகிய மியன்மாரில் 'தேரவாத பௌத்தம்' அனுஷ்டிக்கப்படுகின்றது.

-இரஞ்சித் ஜெயகர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்ப் பற்றாக்குறையை ஏற்படுத்திய ‘விஷ பெக்டீரியா’



அமெரிக்காவின் ஒஹியோ பிராந்தியத்தின் வடமேல் பகுதியில் வசிக்கும் சுமார் ஐம்பது லட்சம் பேரளவிலானோர் அண்மையில் நீர்ப் பற்றாக்குறையினை எதிர்கொண்டனர். அந்த பகுதிக்கு நீர் வழங்கும் ‘ஈரி’ என்றழைக்கப் படும் ஏரியின் மேற்குப் பகுதியில் ‘சயனோபெக்டீரியா’ என்ற விஷ பெக்டீரியா பரவியமையே இதற்கு காரணமாகும். ‘ஈரி’ எனும் இந்த ஏரியானது, வட அமெரிக்காவின் ஐம்பெரும் ஏரிகளில் ஒன்றாகும்.

ஒஹியோ பிராந்தியத்தின் வடமேல் பகுதியிலுள்ள டொலெடோ பிரதேச மக்களே, இந்த நெருக்கடிக்கு பெரிதும் முகம்கொடுத்துள்ளனர். அப்பிரதேச வாழ் மக்கள் குடிநீர் மற்றும் இதர தேவைகளுக்கு இந்த ஏரியில் இருந்தே நீரைப் பெற்றுக்கொள்கின்றனர். இந்த விஷ பெக்டீரியா பரவியதன் பின்னர், மறு அறிவித்தல் வரை அந்த நீரைக் கொதிக்க வைத்து அருந்துவதனைக்கூட தவிர்த்துக்கொள்ளுமாறு டொலெடோ ஆளுநர் அப்பிரதேச வாசிகளுக்கு அறிவித்தல் விடுத்திருந்தார். இந்த விஷத்தை அப்புறப்படுத்த என்ன செய்யலாம் என்பது குறித்தும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.



## விஷப் படலம்

இது ‘மைக்ரோசிஸ்டின்’ எனும் ஒருவகை விஷப் படலமாகும். ‘மைக்ரோசிஸ்டிஸ்’ என்ற சயனோபெக்டீரியாவினாலேயே இது வெளியிடப் படுகின்றது. இந்த விஷப் படலம் பரவியுள்ள நீரை அருந்துவதனால் கல்லீரல் பாதிப்பு, நரம்புப் பாதிப்பு என்பன ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது. ‘நோஆ’ நிறுவனம் (National Oceanic and Atmospheric Administration - NOAA), அண்மையில் வெளியிட்ட செய்மதிப் புகைப்படங்களில், இந்த ஏரியின் மேற்குப் பகுதியில் நீலப்பச்சை நிறத்தில் இந்த விஷப் படலம் பரவியிருந்ததைக் காண முடிந்தது.

## நீரின் மேற்பரப்பில் பொஸ்பரஸ்

இந்த ஏரியைச் சூழவுள்ள விவசாயப் பண்ணைகளில் பயன்படுத்தப்படும் ரசாயன உரங்கள், விலங்குப் பண்ணைகளின் கழிவுகள், பறவைகளின் எச்சங்கள் என்பன பலத்த மழை நிலவும் காலங்களில் மழை நீரினால் அடித்து வரப்பட்டு, ஏரியுடன் கலந்துவிடுகின்றன. அந்தக் கழிவுகள் அப்பகுதியில் வீசும் காற்றினால், டொலெடோ பகுதியை நோக்கித் தள்ளப்படுகின்றன. இந்த கழிவுகளில் அடங்கியுள்ள பொஸ்பரஸ் ஆனது, மைக்ரோசிஸ்டிஸ் சயனோபெக்டீரியாவை போஷிக்கின்றது. வெப்ப காலத்தில், நன்கு சூரிய ஒளி கிடைக்கும் போது, இந்த மைக்ரோசிஸ்டிஸின் வளர்ச்சி துரிதமடைவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.



## நீர்நிலைகளில் கழிவுகள் சேர்வதைத் தடுத்தல்

1960 மற்றும் 1980 இலும் இவ்வாறு சயனோபெக்டீரியாவின் வளர்ச்சி நிகழ்ந்துள்ளது. இதனையடுத்து, அமெரிக்காவிலும் கெனடாவிலும் காணப்படும் இயற்கை நீர்நிலைகளில் இத்தகைய கழிவுகள் சேர்வதனைத் தடுத்தமையினால், இந்த நிலைமை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு நீர்நிலைகளை அசுத்தப்படுத்தும் சயனோபெக்டீரியாக்களில் பல வகைகள் உள்ளன. மைக்ரோசிஸ்டிஸ், எனபேனா, ஒசிலடோரியா, எபெனொப்ஸிஸ் என்பனவும் இதில் அட[illegible]கும். இவற்றினால், நீர்வ[illegible] உயிரினங்களுக்கும் நீர்வாழ் தாவரங்களுக்கும் பாரிய பாதிப்புகள் ஏற்படுகின்றன.

-(இ)

## இவ்வார கார்ட்டூன் படம்








இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2014, ஒகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday August 27, 2014.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org